

உ
சிவமயம்

சைவ வித்தியாசாலைகளில்
உபயோகிக்க வேண்டியவை
'சபையார்
பால பாடங்களே

இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

இந்துசாதன
ஆங்கில தமிழ்ப்
பிரசுரங்களை
ஆதரியுங்கள்

Registered as a Newspaper in Ceylon.
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈச னெந்தை யிணையடி நீழலே.

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம்
28-ந் திகதி ஆரம்பமானது.

புத்தகம் ருச] யாழ்ப்பாணம்:— சித்திரபானு ஹு ஆவணிமீ கருஉ (1942 ஆக்கஸ்ட் 31 திங்கட்கிழமை) [இலக்கம் [illegible]] 40

பெரியபுராணம்

[ஓர் சிற்றாராய்ச்சி]

திரு. சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை

பெரியபுராணம் திருத்தொண்டர் புராணம் என்று அழைக்கப்படினும் உற்றுநோக்குவோர்க்குச் சுந்தரமூர்த்தி நாயனர் புராணமாகவே காணப்படும். சேக்கிழார், சுந்தரர் சரிதத்தைக் கூறப்புகுந்து அவர் திருத்தொண்டத் தொகை அருளிச்செய்தமை வாயிலாக ஏனைய நாயன்மார்கள் பெருமையைப் புகன்று கடைசியில சுந்தரர் திருக்கயிலைக்கு எழுந்தருளியமையோடு முடிக்கின்றனர். ஒவ்வொரு சருக்கத்திற்கும் திருத்தொண்டத் தொகைப் பாடல்களின் முதலடியையே பெயராக அமைக்கின்றனர். ஒவ்வொரு சருக்க ஈற்றிலும் சுந்தரரைத் துதிக்கின்றார். அப்படித் துதிக்கும் பாடல்கள் மிக அற்புதம் வாய்ந்தவை. இவ்வரிய பாடல்களைச் சைவாபிமானிகள் மனப்பாடஞ் செய்யவேண்டியது அத்தியாவசியம். இத்துதிகள் ஒன்றில், (செய்யுள் 6 பார்க்க)

சுந்தரர் சரித்திரத்தில் குறிப்பிடப்படாத ஓர் அற்புதச் செய்தி கூறப்பட்டிருக்கின்றது. அவ்வற்புதமாவது பரவையார் வீட்டில் பூமாலை கட்டியும் வெற்றிலைபாக்குக் கொடுத்தும் தொண்டு செய்துவந்த ஓர் கூனும் ஓர் குருடனும் சிவபெருமான் சுந்தரர் பொருட்டுப் பரவையாரிடம் தூது சென்ற ஞான்று தம தம் உடற் குறைபாடுகள் நீங்கப்பெற்றமையாம். இவ்வற்புதம் திருத்தொண்டர் திருவந்தாதியிலுங் குறிக்கப்பட்டுளது. யாது காரணத்தாலோ சுந்தரர் சரிதயாகத்தில் இவ்வற்புதம் கூறப்படவில்லை. இஃதேபோல, சம்பந்தர் பாலை நெய்தல் பாடிய மகிமை நம்பியாண்டார் நம்பிகளாற் பல இடங்களிற் கூறப்பட்டிருப்பவும் பெரிய புராணத்தில் விடப்பட்டது. இவைபோன்ற விஷயங்கள் ஆராயத்தக்கன.

துதிகள்

1 மலர்மிசை யயனு மாலுங் காணுதற்கரிய வள்ளல்
பலர்புகழ் வெண்ணெய் நல்லூ ராவணப் பழமைகாட்டி
உலகுய்ய வாண்டு கொள்ளப் பெற்றவர் பாதமுன்னித்
தலைமிசை வைத்து வாழுந் தலைமைநந் தலைமையாகும்

2 தீதுகொள் வினைக்கு வாரோஞ் செஞ்சடைக்கூத்தர் தம்மைக்
காதுகொள் குழைகள் வீசுங் கதிர்நில விருள்கால் சீப்ப
மாதுசேர் புலவிநீக்க மனைவிடை யிருகாற் செல்லத்
தூதுகொள்பவரா நம்மைத் தொழும்புகொண்டுரிமை கொள்
வார்

3 பேசநிறைந்த வுள்ளத்தால் நீல நிறைந்த மணிகண்டத்
தீசனடியார் பெருமையினை யெல்லாவுயிருந் தொழவெடுத்துத்
தேசமுய்யத் திருத்தொண்டத்தொகை முன்பணித்த
திருவாளன்
வாசமலர் மென்கழல் வணங்க வந்த பிறப்பை வணங்குவாம்

4 காட்டாதிய முன்னுனி னன்னு ஞலகத வைம்படையின
பூட்டார் மார்பற் சிறியமறைய புதல்வன் தன்னை புக்கொளி
யூர்த்
தாட்டா மரையின் மடுவின்கட் டணிமாமுதலை [illegible] நின்ற
மீட்டார் கழல்க ளினிவாரா மீளா வழியின் மீட்டவே

5 பண்ணுந் தடமும் புடைசூழு மொற்றியூர்ப் பரமர் தாம்
தண்ணும் தாமும் பிரியாதார் தோழத் தம்பிரானாரை
இணையுங் கொங்கைச் சங்கிலியா ரெழில்மென் பணைத்
தோளைத் துவக்க
அணையும் மொருவர் சரணமே யரணமாக அடைந்தோமே

6 தேனுங் குழலும் பிழைத்ததிரு மொழியாள் புலவிதீர்க்கமதி
தானும் பணியும் பகைதீர்க்குஞ் சடையார் தூது தரும்
திருநாட்
கூனுங் குருடுந் தீர்த்தேவல் கொள்வார் குலவு மலர்ப்பாதம்
யானும் பரவித் தீர்க்கின்றேன் எழுபிறப்பின் முடங்குகூன்.

7 உளத்திலொரு துளக்கமிலோ முலகுய்ய விருண்ட திருக்
களத்தமுது குன்றாத தனைக மாற்றினிலிட்டு
வளத்தினமலி யேழுலகும் வணங்கு பெருந்திருவாரூர்க்
குளத்தி லெடுத் தார்வினையின் குழிவாய் நின்றெனை
யெடுத்தார்.

8 செந்துண்டென்ற திருத்தொண்டிற் சிந்தை செல்லும்
பயனுகந்த
குறியுடன் குறிலுங் குறையொன்றில்லோ நிறையுங்
கருணையினுல்
வெறியுஞ் சோலைத் திருமுருகன் பூண்டிவேடர் வழிபறிக்கப்
பறியுண்டவரெம் பழவினைநோய் பறிப்பா ரென்னும் பற்றுலே

9 மேலரிய பெருந்தவம் யான் முன்புவினைத் தனவென்னே
யாலதமோர் பொருளலா எனமனத்து மண்ணியே
காவலர்கள் வரிபெருகு நதிநிழிய வழிவிடுத்த
சேவடிப்போ தெப்போதுஞ் சென்னியிலு மலர்த்தனவால்

10 செற்றார் தம் புரமெரித்த சிலையார் செல்வத்திருமுருகன்
பூண்டியினிற் செல்லும்போதிற்
சுற்றுஞ் சிலைவேடர் கவர்ந்துகொண்ட தொருநிதியின்
பரப்பெல்லாஞ் சுமந்து கொண்டு
முற்றுத மூலையுமையின் பாகன் பூத முதற்கணமே யுடன்
செல்ல முடியாப் பேறு
பெற்றார் தங்கழல் பரவ அடியேன் முன்னைப் பிறவியினிற்
செய்ததவம் பெரியவாறே.

திருத்தொண்டர் திருவந்தாதிப் பாடல்

கற்றக் கெவனே புகல்திரு வாரூரன்பொன் முடிமேல்
ஏற்றத் தொடையதும் இன்னலடைக் காயு மிடிதருமக
கோற்றெருத்த கூனுங் கூன்போய்க் குருடனுங் கண்
பெற்றமை
சாற்றித்திரியும் பழமொழி யாயித் தாணியிலே

பட்டினத்தார் பாடலிற் காணும்
சில குறிப்புகள்

வித்துவான். திரு. மு. ஆறுமுக தேசிகர், திருவெண்காடு.

(தொடர்ச்சி)

இறைவனது வீர்தியாகிய இடபத்தினது உபரிய நிலைக்கு, கபிலை மலை நடந்து சென்றால் எவ்வாறு காணப்படுமோ அதன் தோற்றத்தையும், அதனது இரண்டு கொம்புகளுக்கு இரண்டு பிறைகள் சேர வைத்திருத்தலையும், உமாதேவியாரது திருவாயினின்றுந் தோன்றுஞ் சொற்களுக்குக் கிள்ளைமொழியினையுங் குயில் மொழியினையும், அவ்வம்மையாரது திருமுகத்தில பொலிவும் திருக்கண்களுக்கு ஒளியோடு கூடிய நீல மலர்கள் தாமரை மலரின்மீது மலர்ந்திருத்தலையும் இவ்வாசிரியர் உவமை காட்டுகிறார். சிவந்த திருமேனியுடைய விரையப் பெருமான் தோற்றத்துக்கு, அதிக கையைத் தாங்கிப் பவளமாலை ஒன்று நடந்து வருவதாக ஒப்புக் கூறுகிறார்.

பொற்றோரணத்தைச் சுற்றிய தகிலின் அஞ்சொல மடந்தையாகு அம்மையின் உரகத்தில் அணிபெறச்சுற்றிய ஒம்மென சவிதகத்திற்கு, அணியியல கமுகை அலங்கரித்திருப்பதை அவர்கள் கழுத்தில் அணிகள் அணிந்திருத்தலுக்கும் எடுத்துக் காட்டுகின்றார். இன்னும் அவர்களது முகத்திற்கு மாசறு மதியத்தையும், அதிற காணப்படும் அதரத்திற்கும அதன் மேற்புறத்தில் அமைந்திருக்கும் மூக்கிற்கும் பவளத்தின் அருகே (மேற்புறத்தில்) முத்துக்களை வரிசையாக வைத்தாற் போல ஒழுகி, நீண்டிருக்கின்ற முறுவலொன்றைப் பதித்து வைத்திருத்தலை உவமிக்கின்றார்.

14. அரன் அன்பர்க்கு எளியன்

மருதிடத்தெ ரண்ட மருதவாணர் அடியார்கள் பசித்தபோடு பச்சிலையிட்டுத் தன்னை வழிபடினும் அவர்களுக்கு எனறும் அழியா வீட்டின்பத்தைக் கொடுத்தருளுவர். மெய்யன்புடனே கொச்சியாயினும் காங்கையாயினும் பச்சிலையிட்டுப் பரவுந் தொண்டர்களைக் கருவிடைப் புகாமற் காத்தருள் புரியுந் தகைமையினையுடையார். ["பதந்தைமயாலே பணிகதடி யாரெதாழு, முத்தி கொடுத்தவர் முனைபுனை குரவோ" என, "யாவர்க்கு மாம இறை வற்கொரு பச்சிலை" என கூறிய திருமந்திரப் பாடல இங்குநோக்கற்பாற்று, நோக்கி மகிழ்தக்கது] இவ்வாசிரியரே தாம் இயற்றிய திருக்கழுமல மும்மணிக்கோவை என்னும் நூலினும் "நுகரூதலைப "போதுடனிடு பச்சிலையுடன் புனலுடைடக்கும்,......... தேவணிபுதேசா வணங்கின, தாமும் பெறுத அடித்தாமரை சென்று சார்வதற்கே" எனக் கூறியுள்ளார். இவ்வாறு அரன் அன்பர்களுக்கு எளியனுகிருத்தலின் இவ்வாசிரியரும் மருதவாணரை நோக்கி, "நித்த நிரம்பிடையை செஞ்சடை யோனே" எனவிளித்து, "நீதவரீர் என்னையும அடிமையாகக் கொண்டு, யான் இட்டு வழிபடும் பச்சிலையினையும் ஏற்று அடியேனைப் பிறவியாகிய சிறையினின்றும் நீக்கி காத்தருள் புரிய வேண்டும்" என விண்ணப்பிக்கின்றார்.

15 அகத்துறை

காமே இடையுள்ள வரதர் வாய்
இனி காங்கள் சொலவ
ஆமே மருதன்மருதவனத்தன்ன
மன்னவரைப்
பூமே லணித்து பிழைக்கச்செய்
தாலொரு பொட்டுமிட்டாள்
தாமே தளர்பவ ளைப்பாரம்
ஏற்றுதள தக்கதன்றே.

இது தலைமகளது இடைச் சிறுமையினை நோக்கிய தலைமகன் அவளது நலத்தினைப் பாராட்டு முகத்தாற் சொலவியது.

தளர்ச்சியோடு செல்லும் ஒருவரைக் கண்ட அளவில அவரது தளர்ச்சியைக்கண்டு மனமிரங்காது, மேலுமேலும் அவர் மீது சுமையினை ஏற்றி நீ செல் என்று போகவிடுதல், உலகத்தில தகுதியுடையார் செய்யுங் காரியமல்லவே. அவ்வாறிருக்க, அன்னமபோலும் நடையினையுடைய இம்மகளுக்கு, அவளது இடைச் சிறுமையினையும் தன்மையினையும் பாராது தலையின் மீது நிறைந்தபூக்களை அணிந்திருக்கின்றார்களே. அதுமட்டுமோ, நெற்றியில் ஒரு பொட்டும் இட்டுள்ளார்களே, இது என்ன? தகுதியுடைய காரியமல்லவே. இவ்வாறு மேலும மேலுஞ் சுமையினை ஏற்றினால் இவளது இடை இற்றுவிடுமே எனத் தலைவன் கூறினான்.

சடைமே லொருநதி
சுமைத்தருப்ப மேனிப்
புடைமே லொருநதி பொலிய—
இடையேபோய்
சங்கே கலையே மருதந்துத்
தான்கொடுப்ப
தெங்கே யிருக்க இவள்"

காமமிக்க தலைவி தலைவனையே எக்காலமும் நினைத்துக்கொண்டிருப்பதால் உணவிற பற்றில்லாமல் உணவை வெறுக்க, அதனால் தலைவியின் உடல் மெலிந்து ஆடை அணிகலன் முதலியனவெல்லாம் தாமாகவே கழுவின. அவ்வாறு கழுவின தலைவியின் நிலைகண்ட தோழி கூறியது இது.

சடையினையுடைய திருமுடியின் மேல கங்கையாகிய ஒருநதி வளர்ந்து கொண்டிருப்ப, திருமேனியின் இடப்புறத்தில் உமையவளாகிய ஒருநதி விளங்கிக் கொண்டிருப்ப இவ்விருவர்களுக்கும் இடையில இவளும் சென்று மருதப்பிரானைப் புணர அடைய வேண்டும் என்ற விருப்பத்துடன் ஆடை அணிகலன்களை யெல்லாம் கொடுக்கின்றாளே; எங்கு இருக்கலாம் என்று கருதி இவ்வாறுகக கொடுக்கின்றாள்; எமமால அறிய முடியவில்லையே என்று தோழி கூறினள்.

இதுகாறும் பட்டினத்தார் இயற்றியருளியதும், பதினோராந் திருமுறையுள் சேர்க்கப்பட்டிருப்பதுமாகிய கோயினான்மணிமாலை முதலாகிய ஐந்து நூல்களுள் திருவிடைமருதூர் மும்மணிக்கோவை என்னும் நூலினை எடுத்துக்கொண்டு ஆங்காங்குக் காணப்படும் சிற்சில குறிப்புகளைமட்டும் யாம் தொகுத்து எழுதினும்.

—ஞானசம்பந்தம்.

ரூஸ்வெல்டுக்கு வேண்டுகோள்

இந்திய நெருக்கடியைத் தீர்த்து வைக்கவும்

வாஷிங்டன் ஆக 19

இந்திய நெருக்கடியைத் தீர்க்கவும் இந்தியாவின தற்சார்பிக அரசாங்கத்தை ஏற்படுத்தவும் ஐக்கிய அமெரிக்கா தனது செல்வாக்கை உபயோகப்படுத்த வேண்டுமென அபேதவாதத் தலைவரான யீமறர். நோர்மன் தோமஸ் முதலிய 14 பேர்கள் ஜனாதிபதி ரூஸ்வெல்டுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். இந்தியாவும் நேசநாடுகளும் ஒத்துழைப்பதற்கான திட்டத்தை வகுக்க அமெரிக்க உதவி வேண்டுமென்றும் அவர்கள் கோரியிருக்கிறார்கள்.

இந்திய பிரபல வானசாஸ்திரிகள்

(Famous Hindu Astronomers)

வராஹமிஹிரர், கி. பி. 550

மட்டுவில் திருக்கணிதர்
சி. சுப்பிரமணிய ஐயர்

ஆரியபட்டருக்குப்பின் விளங்கியவர் வராஹமிஹிரராவர். இவர் காம்பிலகம் (Kampillaham) என்னுமிடத்தில் கி. பி 550-ல் ஜனித்தார். இவர் தந்தையார்பெயர் ஆதித்தியதாஸர் எனப்படும். வராஹமிஹிரர் மகததேசத்தின் தலைநகரமான பாடலிபுத்திரத்தில் சிலகாலம் தங்கி,பின்னர்,அவந்தி (Avanti) மாநகர்சென்றார். இவ்விடமிருக்கையில் இவர் பல கலைகளையுங் கற்றதுடன் ஆசியத்தில் வல்லுனராகவும் விளங்கினர். சிறுபராயந்தொட்டு இவர் சோதிடக்கலையிலும்மிகவு நுட்பமுடையவராயிருந்தார்.

தந்தையார் காலஞ்சென்றபின் இவர் அவந்தியில் 'கபித்தாகஸ்மம்' என்ற பெயருடன் பள்ளியொன்று ஏற்படுத்தி, அரனின் அட்டமூர்த்தங்களுள் ஒன்றாகிய ஆதித்தன்பால் அன்புபூண்டு ஒழுகுவாராயினர், இவ்வாறிருக்கையில இவர் யவனர்களின் (Grecians) வானசாஸ்திர கணிதசாஸ்திர வன்மையைக் கேட்டறிந்தபின்னர் யவனதேசஞ்சென்று அன்னவர்பால அவர்களது முறைகளையும் பிறவற்றையும் ஆராய்ந்தறிந்தார். இதன் பின்னர்பல ஜோதிஷநூல்களை இயற்றினர்.

இவர் இயற்றிய நூல்கள்(1)பஞ்சசித்தாந்திகா. (2) பிருகத்ஜாதகம், (3) பிருகத்ஸம்ஹிதை ஆகியனவாகும். மேலும் இவரால் திருத்திப் பிரசுரஞ் செய்யப்பட்ட சூர்ய சித்தாந்தமானது பழைய சூரியசித்தாந்தத்தையே ஆதாரமாகக் கொண்டதும் ஆரியபட்டருடைய* அர்த்தராத்திரிக (Ardharatrika System of Astronomy) முறையையுந் தழுவியதுமாகும். இன்னும், பௌலிசசித்தாந்தமும்ரோமகசித்தாந்தமும் வசிஷ்டசித்தாந்தமும் பிதாமஹசித்தாந்தமுமே பஞ்சசித்தாந்திகாவிற் கூறப்படும் சித்தாந்தங்களாகும்.

வராஹமிஹிரர் இயற்றிய நூல்கள் சிலவற்றில யவனர்கள் வழங்கிய வானசாஸ்திர சோதிட சாஸ்திர பதங்களுட்சில, சிலமாற்றத்துடன் வழங்கப்பட்டிருத்தலைக் காணலாம்.

உதாரணமாக, ஆபோக்லிமம் (Apoklima) திரேஷ்காணம் (Drickkana) துருதரா (Durudhara), ஹாரிஜ (Harizon) ஹிபுகம (Hipuka) ஹோரா (Hour), ஜாமித்ரம் (Diameter) கேமத்ருமம் (Kemadruma), கேந்திரம் (Kendra) கோணம் (Kona), லிப்த (Lipta), பணபரா (Panaphara), சுனப (Sunapa) வேசி (Vesi), போன்ற பதங்களாகும்.

வராஹமிஹிரர்க்கு முன்னிருந்த சில வானநூலாசிரியர்பற்றி* கூறியுள்ளார். அவ்வாறு கூறப்பட்டவர்கள் லாடதேவர் (Ladadeva) சிம்ஹாசாரியர் (Simhachary) ஆரியபட்டர் (Aryabhatta I), பிரத்யும்னர் (Pradyumna) விஜய

தொடர்ச்சி 4-ம் பக்கம்

---

*F. N. இவர் இருமுறையான வானசாஸ்திரக் கொள்கைகளைப் பரப்பியவர். ஒன்றின்படி முதற்திதி லங்காவில (Lanka) சூரியோதயத்தில தொடங்குவதாகக் கணக்கிடப்படுவது. இது அவுதாயிக (Audayiha) முறையாகும். மற்றது நடுநிசியில் தொடங்குவதாகக் கணக்கிடப்படுவது. இது அர்த்தராத்திரிக (Ardharadtrika) முறையாகும்.

முன்னேச்சுரம்

[கொழும்பு கோட்டாஞ்சேனை திரு. வை. முத்துக்குமாரசுவாமி]

இலங்கையில் கதிர்காமம் முன்னேச்சுரம் திருக்கோணமலை திருக்கேதீச்சுரம் நகுலேச்சுரம் முதலான புண்ணியதலங்கள் பல உண்டு. அவைகளுள் முன்னேச்சுரம் மிகுந்த மகிமையும் பழமையும் வாய்ந்த தலமாகும். இங்கு ஆடிமாசம் 16-ந் திகதி (31-7-42) உற்சவம் ஆரம்பமாகிச் சென்ற 27 நாட்களாக நடைபெற்றது. 25-ந் திகதி தேர்த் திருவிழாவும் 26-ந் திகதி தீர்த்தவிழாவும் நிகழ்ந்தன.

முன்னேச்சுரம் என்னும் கிராமம் சலாபத்துக்கு 1½ மைலுக்கு அப்பால் உள்ளது. அக்கிராமத்தில் நடுநாயகமாக வடிவாம்பிகை சமேதராய் விளங்கும் முன்னைநாதரின் திருஆலயம் விளங்குகின்றது. இற்றைக்கு 67 ஆண்டுகளுக்குமுன்னர் 1875ம் ஆண்டு கொழும்பூர் ஸ்ரீமத் கா. குமாரசுவாமிக் குருக்கள் என்பவரால் பண்டைக்கோவில் இருந்த இடத்திற்றான் இன்று காணப்படும் கோவில் இருந்த இடத்திற்றான் இன்று காணப்படும் கோவில் தாபிக்கப்பட்டுக் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

1804 ம் ஆண்டு முன்னேச்சரக் கோவிலில் உள்ள குருக்கள்மார் குறைவான வருவாய்கள் கிடைத்தமை கண்டு பிரிட்டிஷ் தேசாதிபதிக்கு விண்ணப்பப் பத்திரம் அனுப்பினார்கள். இதற்கு அவர் அவ்வாறு கொடுக்க முடியாது என்று மறுத்து அக்கோவிலுக்கு அருகேயுள்ள சிலபாகத்தை மட்டும் வழங்கினர்.

1753-ம் ஆண்டில் கண்டிநகரைத் தலைநகராகக் கொண்டு இலங்கையை ஆட்சி செய்த கீர்த்தி ஸ்ரீஇராசசிங்க மன்னன் முன்னேச்சரத் திருப்பணிக்காக 32 அவுணம் நெல்விளை நிலத்தைத் தாமிரசாசனமாக்கிக் கொடுத்தான்.

போர்த்துக்கீசர் 16-ம்நூற்றாண்டு ஆரம்பத்தில் இலங்கையின் ஆங்காங்குள்ள பிரபலமான இந்து பௌத்த கோவில்களை இடித்து அழித்தனர். முன்னேச்சரமும் பறங்கியரால் அழிக்கப்பட்டது.

15-ம் நூற்றாண்டு ஆரம்பத்தில் கி.பி 1410 தொடக்கம் 1468 வரையும் ஜெயவர்த்தனபுரி யென்று அக்காலத்தில் வழங்கிய கோட்டை என்னும் நகரிலிருந்து (இது கொழும்புக்கு அண்மையிலுள்ளது) ஆறும் பராக்கிரமவாகு மன்னன் இலங்கைச் சிம்மாசனத்தில் வீற்றிருந்தான். அம்மன்னன் முன்னேச்சரத்தின் மகிமையைக் கேள்வியுற்று, அக்கோவிலுக்கு வேண்டிய சர்வமானியங்களையும் வழங்கினன்.

• • •

தமிழ் மன்னர் ஈழநாட்டை ஆட்சி செய்த காலத்தில் மனுநீதி கண்ட சோழன் குலத்துதித்த குளக்கோட்டு மகாராசன் திருக்கோணமலைச் சிவ ஆலயத்தைக் கலியுகம் 512 வைகாசிமாசம் 10 ம் திகதி திங்கட்கிழமை சீர்திருத்தம் செய்தான் எனச் சிலாசாசனம் கூறுகின்றது. அதன் பின்னர்க், குளக்கோட்டன் முன்னேச்சரத்தை அடைந்து அங்கு பல திருப்பணிகளைச் செய்வித்தான். அம்மன்னன் சோழ தேசத்திலிருந்து தனது குலகுருவாகிய நீலகண்ட சிவசாரியாரையும் அவர் குடும்பத்தாரையும் சில பிராமணர்களையும் அழைப்பித்து முன்னேச்சரக் கோவிலில் கும்பாபிஷேகம் நடத்துவித்தார். கோவிற் பணிகளைச் செய்வதற்கு ஆற்றுவதற்குச் சோணாட்டிலிருந்து பலசாதி மக்களை மன்னன் அழைப்பித்து கோவிலுக்குச் சுற்றுவளத்தில் ஆங்காங்கு குடியேற்றினன். அவர்களுக்குக் கோவில் விளைநிலங்களை வேளாண்மை செய்யும்படி ஒப்புவித்தார். அந்த நிலங்களிலிருந்து வரும் விளைவுகளைக் கோவிலுக்கு உபயோகமாகும்படி ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டன. தினந்தோறும் முன்னேச்சரக் கோவில் எவ்விடத்தும் பதினோராயிரம் திருவிளக்குகளும், உள்மண்டபத்தில் முன்னைநாதரின் சன்னிதானத்தில் ஆயிரம் பசுநெய் விளக்குகளும் ஏற்றப்பட்டு வந்தன. ஆராய்ந்து எடுக்கப்பட்ட செஞ்சம்பா அரிசி தங்கக் கிண்ணங்களில் அழகுற வைத்து நிவேதிக்கப்பட்டது. இத்திருப் பணிகளைப் பரிபாலனஞ் செய்ய மதுரையிலிருந்து உயர்ந்த குடும்பத்திலுள்ள தனிபுண்ணுப் பூபாலன் என்பவன் இப்பகுதிக்குத் (வன்னிநாட்டுத்) தலைவனாக நியமிக்கப்பட்டான். பின்பு முன்னேச்சர ஆலயத்தைச் சேர்ந்த பூமிகள் 66 கிராமங்களாக்கப்பட்டன. அக்கிராமத் தலைவர்களாகச் சிலவேளாண் பிரபுக்களை நியமித்து அவர்களுக்குச் சந்திரசேகர முதலிப் பட்டங்கட்டி, "பட்டங் கட்டிக் கோருளை" "அத்துக் கோருளை" என்னும் பட்டங்களைச் சூட்டினர்.

தெதுறுஓயா முகத்துவாரத்துக்குச் சமீபத்தில் சலாபம் என்னும் நகர் உண்டு. இது வடமேல் மாகாணத்தைச் சார்ந்தது. முன்னேச்சுரத்து அண்மையில் ஓடும் நதியைத் தமிழர் 'மாயவனுறு' என்று வழங்குகின்றனர். சிங்களரால் இது தெதுறுஓயா என வழங்கப்பட்டு வருகின்றது. மாயவனுற்றங்கரையில் செய்யப்படும் புண்ணியங்கள் கோடி பங்கு பலனைத்தரும் என்றும், இத்தீர்த்தக் கரையிற் செய்யப்படும் பிண்டதர்ப்பணம் மிகப் பிரீதியாகும் என்றும் இந்துக்களுக்கு நம்பிக்கை உண்டு.

பண்டைக் காலத்தில் முன்னேச்சரத்தைத் தரிசனம் செய்வதற்கு வியாசமுனிவர் இந்தியாவிலிருந்து வந்தார் என்றும் காசியில் அவர் செய்த சிவதோஷத்தைப் போக்குவதற்காக முன்னைநாதரைப் பூசித்து அருள் பெற்றார் என்றும் அறியக் கிடக்கின்றது.

வியாசமுனிவர் வருமுன்னர், ஸ்ரீஇராமர், சீதாதேவி, இலக்குமணன, விபீஷணன் முதலியோரோடு ஒரு காலத்தில் குபேரனுக்குச் சொந்தமாயிருந்த புஷ்பக விமானத்தில் ஏறி ஆகாய மார்க்கமாகப் போகும் பொழுது, இராவணனைக் கொன்ற பிரமகத்தியானது, கரியநிறமும், சயரூபமுடனும் ஸ்ரீஇராமரைப் பின் தொடர்ந்தது. அப்போது முன்னேச்சர தலத்தைச் சமீபத்தவுடன் ஸ்ரீராமர் தம்மை அப்பிரமகத்தி விட்டகன்றது கண்டு பூமியில் இறங்கினர். அந்த ஸ்ரீராமர் இரண்டு கைகளையும் சிரமேற்கூப்பி, உள்ளம் நெக்குருகி, மெய்மயிர் சிலிர்ப்ப வணங்கினர். சீதாபிராட்டியார் முதலியோர் அங்ஙனமே தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தார்கள். முன்னைநாதப் பெருமான் ஸ்ரீராமருக்குத் திருக்காட்சி கொடுத்தருளி மாயவனுற்றுக்கு வடக்கே மானாவரி என்னும் தலத்திலும், திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம், சேதுக்கரையில் (இராமேச்சரத்திலும்) ஆகிய தலங்களிலும் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யும்படி திருவாய் மலர்ந்தருளினர். அவ்வாறேயொப்படி ஸ்ரீராமர் மானாவாரியிலே சொர்ண (தங்க) லிங்கத்தையும், திருக்கோணேச்சரத்தில் ரௌப்பிய (வெள்ளி) லிங்கத்தையும், திருக்கேதீச்சரத்தில் இரத்தின லிங்கத்தையும், சேதுக்கரையில்சைகத (மண்)லிங்கமாகிய இராமலிங்கத்தையும் பிரதிஷ்டை செய்தார்.

தொடர்ச்சி 4-ம் பக்கம்

விளம்பரம்

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மகோற்சவம்

மேற்படி கோயில் மகோற்சவம் இப்பொழுது நடைபெறுவதால், 1942ம் ஆண்டு ஆகஸ்ட் மாசம் 26ந் திகதி தொடக்கம் செப்டம்பர் மாசம் 11ந் திகதி முடியக் குறித்த கோயில் வீதிகளாகிய யாழ்ப்பாணம் பருத்தித்துறைத் தெருப்பாகம், பழைய சந்தைத்தெருப் பாகம் என்னுமிவை மார்க்கமாக எவ்வகையான வண்டிகளும் காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணிவரையும் அவ்வீதிகள் மார்க்கமாகச் செல்வதை ஒழித்து உடையமன்தெரு காவாக்குழைத்தெரு, நல்லூர் 1ம் கம்பர்க் குறுக்குத்தெரு என்னும் இவைகள் மார்க்கமாகவே போக்குவரவு செய்ய வேண்டுமென இதனால் எவருக்கும் பிரசித்தஞ் செய்யப்படுகின்றது.

S. G. De. சொய்சா
வடமாகாண உதவிப் பொலிஸ் தலைவர்
பொலிஸ்தானம்,
யாழ்ப்பாணம். 25.8.1942.
G. 23 27—31.8.42.

வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமரனாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சித்திரபானுஸு ஆவணிமீ கடுஉ திங்கட்கிழமை

ஸ்ரலின்கிருட் யுத்தம்

ருஷியாவிலுள்ள பிரதானமாகிய ஸ்ரலின் கிருட்டில் இப்பொழுது ருஷியருக்கும் ஜர்மனியருக்குமிடையே நிகழும் யுத்தம் "ஆவியோ நிலையிற் கலங்கியது ஆக்கை அகத்ததோ புறத்ததோ அறியேன்" என்று பாரதத்திற் கூறப்பட்ட நிலையில் இருக்கிறது. ஸ்ரலின்கிருட்டைக் கைப்பற்றி விட்டால் ருஷியாவில் அதன்மேல் அதிக யுத்தஞ் செய்ய வேண்டி நேராதென்ற நோக்கத்துடன் பகைவர் யுத்தஞ் செய்ய, ருஷியரும் ஸ்ரலின் கிருட்டைப் பறிகொடுத்தால் தங்கள் சுயாதீனமும் பறிபோய் விடுமென்ற நோக்கத்தோடு கடிது எதிர்த்து நின்று பகைவருடன் சமர் புரிகின்றனராம். ஜர்மனியரெண்ணிலா பெருந்திரளான சைனியங்களையும் டாங்கிகளையும் ஏனைய யுத்த உபகரணங்களையும் கொண்டுபோய் நிறுத்தி ருஷியரைக் கோரமாகத்தாக்க, ருஷியரும் தங்களாலான படைகளைத் திரட்டி இயன்ற வரையிற் போர் புரிந்து பகைவரை முற்பட்டுப் புகாத வண்ணம் தடுத்தபடி நிற்கின்றனரெனப் பிந்தி வந்த தந்திச் சமாசாரங்களைக் கொண்டு அறியக் கிடக்கின்றது. இந்த யுத்தத்திலே இருபக்கத்திலும் பெரும் பொருட்சேதமும் உயிர்ச்சேதமும் ஏற்படலாயிற்றென்பதும் அறியலாகும். சில தானங்களில் ஜர்மனியர் பின்வாங்கினர்; வேறு சில ஸ்தானங்களில் ஜர்மனியர் ருஷியரை வெந்நிடச் செய்து முற்பட்டுச் செல்கின்றனராம். இந்த யுத்தத்தின் முடிவு எப்படியாகுமோ என்று சொல்வதற்கு இது சமயமல்ல.

குறித்த ஸ்ரலின்கிருட் ருஷியருக்கு ஒரு உயிர்நிலையமென்று சொல்லத் தக்கதாம். ஸ்ரலின்கிருட் பகைவர் கைப்படுமானால் வொல்காநதி மூலமாக பாகு என்னுமிடத்திலிருந்து மத்திய ருஷியாவிற்கு எண்ணெய் முதலியவற்றை அனுப்பிவைத்தல் இயலாதாகுமாம். ஆண்டுதோறும் பாகுவிலிருந்து அனுப்பப்படும் எண்ணெயின் நிறை 24,000,000 தொன்னாகுமாம். இன்னும் அந்த ஸ்ரலின்கிருட் பகைவர் கைப்படுமானால், ருஷிய படையைப் பிரிப்பதோடு பகைவர் ருஷியாவிற் செய்யப்படும் கைத்தொழில் விவசாயத் தொழில்களையும் கெடுத்து விடுதல் முடியுமாம். இவைகளையெல்லாம் முந்தியே உத்தேசித்து ருஷியர் ஸ்ரலின் கிருட்டைக் காப்பதற்காகிய ஆயத்தங்களையும் முயற்சிகளையும் அரண்களையுஞ் செய்துள்ளார்களாம்; பாகுவிலிருந்த பெற்றோல் எண்ணெயை எடுத்துத் தம் பொறுப்பில் வைத்திருக்கின்றார்களாம். இப்படியெல்லாம் ருஷியர் செய்திருக்கும்போது ஸ்ரலின்கிருட்டைப் பகைவர் விரைவில் இலகுவாகக் கைப்பற்றிக் கொள்ள மாட்டார்களென்றே நாம் நினைத்தல் வேண்டும்.

புதிய நேரம்

இன்று இரவு ஒரு மணி தொடக்கம் இப்பொழுதுள்ள நேரம் இன்னமும் அரைமணி நேரம் முந்திவிடப்படும். எனவே நாளைக்காலை தொடக்கம் 7 மணிக்கே எங்களுக்கு விடியும். இந்தியாவிலும் இலங்கையிலும் இற்றைச்சாமம் தொட்டு முற்பட்டநேரம் ஒரே விதமாகவே நிகழும். அரசினர் உள்ளநேரத்தை முந்திச் செல்ல அமைப்பதன் நோக்கம் யுத்தம் கலகங்கள் நடக்கும் இக்காலத்திலே சனங்கள் பகற்பொழுதிலேயே கருமங்களை முடித்துக்கொண்டு வீட்டில் ஒதுங்கிவிடுவது நன்றென்றேயாம். இதனால் அரசாங்க உத்தியோக ஸ்தானங்களும் புகைரதம் முதலியனவும் அரச சம்பந்தமான ஏனைய கருமங்களெவைகளோ அவைகளும் இந்த நேரக்கட்டுப்பாட்டிற்கு இணங்கவே நடைபெறும். ஆனால் கோழிகள் கூவுவதும் காக்கைகள் கரைவதும் செம்போத்து ஒலிப்பதும் சூரியன் உதிப்பதும் செங்கமலம் விரிவதும் பழைய நேரத்திற்கே நடைபெறும்; அவைகள் இந்தப் புதிய கட்டுப்பாட்டுள் அமையா. சைவமக்களாகிய நாங்கள் செய்யும் சந்தியாவந்தனம், சுவாமிதரிசனம், ஆலயங்களில் நடக்கும் பூசை முதலியவற்றை இயன்றவரையிற் கிரமமாகச் செய்வதற்கு எங்கள் அரசினர் உதவியாகவே இருப்பர்; நாட்டை இருட்படுத்துவதென்ற ஒரு கருமத்தில் மாத்திரம் பிரஜைகளாகிய நாங்கள் அரசினருக்குத் துணைபுரிதல் வேண்டும். இனி, பஞ்சாங்க கணிதமும் சுபமுகூர்த்தங்களும் பழைய சரியான நேரத்தையொட்டியே கணிக்கப்பட்டனவாதலின், பஞ்சாங்கம் பார்ப்போர் இப்பொழுது உள்ள புதிய நேரத்திலிருந்து 1 மணித்தியாலத்தைக் குறைத்தே எதையும் பார்த்துக்கொள்ளுதல் வேண்டும்.

ஸேர். பரன் ஜயதிலகை

உணவுப் பொருள் விஷயமாக இந்தியா சென்றிருந்த ஸேர் பரன், இப்பொழுது கல்கத்தாவிற்குச் சென்றிருக்கின்றார்.

விவாகம்

பத்மநாபன்
மகேஸ்வரிதேவி

நிகழும் சித்திரபானு வருஷம் ஆவணி மீ 5-ந் திகதி வெள்ளிக்கிழமை (21-8-42) இரவு 8½ மணியளவில் உள்ள மீனலக்கின சுபமுகூர்த்தத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரிப் பிரதமாசிரியராயிருந்த புலோலி திரு. மு. கார்த்திகேசு ஐயர்களின் புதல்வரும் [illegible] இந்துக்கல்லூரியில் ஆசிரியராகக் கடமை பார்ப்பவருமாகிய திருவளர் செல்வன் பத்மநாபனுக்கும் அவ்வூரைச்சேர்ந்த சேர்வயா திரு. மா. வேலுப்பிள்ளையவர்களின் புதல்வி திருவளர் செல்வி மகேஸ்வரி தேவிக்கும் விவாகம் மணமகளில்லத்தில் மிக்க சிறப்பாக நடைபெற்றது.

மணமக்கள் சகல செல்வமும் பெற்று நீடூழி எல்லாம்வல்ல இறைவன் திருவருள் பாலிப்பாராக.

திருத்தணிகைத் திருவிருத்தம்

(வரலாறு)

திருத்தணிகையானது சுப்பிரமணியக் கடவுளுடைய படைவீடுகள் ஆறனுள் ஒன்றாகும். இத்தலத்திற்குச் செருத்தணியெனவும் ஒருகாரணப் பெயர் உண்டு; சுப்பிரமணியக் கடவுள் சூரபன்மன் முதலிய அசுரரோடும் நம்பி முதலிய வேடுவரோடும் சிறுசமர்புரிந்து அச்சமர் ஓய்ந்து இத்தலத்தில் எழுந்தருளிய காரணத்தினால் இதற்குச் செருத்தணியென்னுங் காரணப்பெயர் உண்டாயிற்றென்பது:—

"செக்கண் வெய்யசூர்ச்செருத்தொழிலினுஞ்சிலைவேடர்
தங்களிற் செயுஞ் செருத்தொழிலினுந்தணிந்திட்டே
யிங்குவந்து யாமிருத்தலாற் செருத்தணி யென்றோர்
மங்கலந்தரு பெயரினைப் பெற்றதிவ் வரையே"

என முருகக்கடவுள் வள்ளிநாயகியாருக்குத் திருவாய் மலர்ந்தருளியதாக வரும் கந்தபுராணத் திருவிருத்தத்தால் உணரப்படும். எங்கள் பரமசிவன் சாந்நித்தியமாகக் கயிலையின் கண்ணே எழுந்தருளி ஆன்மகோடிகட்கெல்லாம் அனுக்கிரகம் புரிகின்றனரோ, அங்ஙனமே குமாரக்கடவுளும் இத்தணிகாசலத்திற் கோயில் கொண்டருளி, தம்மை வழிபடும் உயிர்கட்கெல்லாம் திருவருள் புரிவரென்பதும் முருகக்கடவுள் திருவாக்காகவே கந்தபுராணத்திற் கூறப்பட்டுள்ளது:—

"மந்தரத்திலும் மேருமால் வரையினும் மணிதோய்
கந்தரத்தவன் கயிலையே காதலித்ததுபோற்
சுந்தரக்கிரிதொல் புவிதனிற் பலவெனினும்
இந்தவெற்பினி லாற்றவும் மகிழ்ச்சியுண் டெமக்கே"

முருகமூர்த்தி திருவுளமுவந்து எழுந்தருளிய இத்திருத்தணிகையின் மகத்துவம் தணிகைப்புராணம் கந்தபுராணம் திருப்புகழ் முதலிய நூல்களில் நன்கு எடுத்து விளக்கப்பெற்றுள்ளது.

தணிகாசலபதிமீது பாடப்பெற்ற செந்தமிழ்ப் பிரபந்தங்கள் பல. அவற்றுள் இத்திருத்தணிகைத் திருவிருத்தமும் ஒன்றாகும். இத்தோத்திரப் பிரபந்தத்தை இயற்றியவர் இற்றைக்கு கடு வருடங்கட்கு முன் விளங்கிய திருவாவடுதுறை யாதீனத்து வித்துவானாகிய தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவராவர். இவர் மாதவச் சிவஞான யோகிகளுடைய பன்னிரு சிறந்த மாணவர்களுள் ஒருவராவர். கவிபாடுந்திறமைபூண்டுள்ளனராதலின் மதுரகவி யென்னும் சிறப்புப் பெயருடன் திகழ்ந்தவர். இப்புலவர் இயற்றிய நூல்களிற் சிறந்தது திருவாவடுதுறைக் கோவை யென்பர். இவர் கந்தவேளிடத்திற் பத்திபூண்டவராதலின் அப்பெருமான் மீது இத்திருத்தணிகைத் திருவிருத்தம் சுப்பிரமணியர் திருவிருத்தம் முதலிய தோத்திரப் பிரபந்தங்களைப் பாடியுள்ளார். இவர் பாடிய பாக்களெனிலோ அவற்றையோதும் அன்பருடைய உள்ளத்தை உருக்குவதோடு மாத்திரம் அமையாது, அந்த முருகனுடைய திருவுளத்தையும் உருக்கி அவ்விறைவனை அடியார்க்கு அருள்சுரக்கச் செய்யும் பான்மையன. இத் திருத்தணிகை விருத்தம், கொடிய நோயாற் பீடிக்கப்பட்டு வருந்தமுற்றுத் தம்மையடைந்த அன்பரொருவருடைய வேண்டுகோட்கிரங்கி இப்பெரியாரால், தணிகாசலத்தையன்மீது பதிகமாகப் பாடப்பட்டதாகும். அந்த அன்பர் நோய்வாய்ப்பட்டு வருந்தித் தணிகைப்பிரானை வேண்டினரென்பது இப்பதிகத்தின் நான்காந் திருவிருத்தத்திற் காணப்படும். "........எண்டிசை யுளார்க்குந் தெரிந்தலாற கொண்டாடி யெல்லாரும் வந்து தொழுதுன், இன்னருள் கொண்டுணா இக்கோயின் யானொருவன் இடருற்றிளைப்ப தழகோ......" எனவரும் அடிகளால் இனிதறியக்கிடக்கின்றது. குறித்த அன்பர் இப்பதிகத்தை காலந்தோறும் திருத்தணிகை முருகையன் சந்நிதியிற் பத்தியுடன் ஓதித் தம நோய் நீங்கப்பெற்றன ரென்பது கர்ண பரம்பரை. குகனடியார் இன்றும் தணிகாசல முருகன் திருமுன்னிலையில் இப்பதிகத்தைப் பத்தியுடன் பாராயணஞ் செய்து தம்மைப் பிடித்த தேகப்பிணி வறுமைப்பிணி முதலிய சகல பிணிகளையும் ஆனந்தரால் நீக்கிக் கொள்ளுகின்றனர். முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் முருகையன் இப்பிரபந்தத்தைத் தன் சந்நிதியிற் பத்தியுடன் படிப்பார்க்குத் திருவருள் புரிந்து அவர்க்கு நேர்ந்த இடரையும் நீக்குவனென்பது கூறு புதுமைத்தோ!

திருத்தணிகைத் திருவிருத்தமாகிய இத்திவ்விய தோத்திரப் பிரபந்தம் இற்றைக்குப் பலவருடங்கட்கு முன், மதுரைத் தமிழ்ச் சங்கத்தினரால் மாசந்தோறும் வெளியிடப்பெற்று வரும் "செந்தமிழ்" என்னும் வெளியீட்டின் ஐந்தாந் தொகுதி முதற் சஞ்சிகையின் அநுபந்தமாக வெளிவந்தது; இதனை அக்காலத்தில் அவ்வரிய வெளியீட்டில் டக்டர். உ. வே. சாமிநாதையரவர்கள் பரிசோதித்துச் சில குறிப்புக்களும் எழுதி வெளியிட்டுள்ளார். இந்நூற் பிரதிகள் இக்காலத்து அகப்படுதலின்றி அருகலாயின வென்றும் இதற்கு எதுமொரு விளக்கக் குறிப்புரையாயினும் எழுதி அச்சிடல்வேண்டுமென்றும், செந்தமிழ்ஞானியும் சைவத்திருவாளருமாகவிளங்கும் திருமயிலை சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை யவர்கள் தமியேனுக்குக் கட்டளையிட்டுத் தம்மிடத்திருந்த ஒரு பிரதியை எமக்கு உதவியுள்ளார். அந்தப் பிரதியும் சிலமுற்ற நிலையிற்றான இப்பொழுது இருக்கின்றது. சருகரிக்க நேரமின்றிக் குளிர்காய நேரமில்லாத் தன்மையிலிருக்குந் தமியேனுக்கு இப்படிப்பட்ட சதகருமங்களைச் செய்வதற்குச் சமயம் வாயாதொழிவது அதனாலன்று; ஆயினும், அந்தப் பெருந்தகையாரின் தூண்டுதலினாலும், இந்தச் சமயத்திலே இப்படியான தோத்திரங்களைப் படித்துக் கலியுகவரதராகிய கந்தரவனை வந்தித்து எங்களைப் பிடித்துள்ள பேரிடர்களை யெல்லாம் அச்செவ்வேள் திருவருளால் அகற்றிவிடலாகுமென்ற எண்ணத்தினாலும், இப்பிரபந்தத்திலுள்ள திருவிருத்தத்தை ஒன்றொன்றாக இப்பத்திரிகையில் என்னால் இயன்ற குறிப்புரையையும் எழுதி வெளியிட உத்தேசித்தேன்; எனது உத்தேசமும் அந்தத் தணிகாசலத்தையன் திருவருள் செய்யிற்றான் கைகூடும்.

காந்திஜியைப் பற்றிக் கவலை

திரு. கே. ஜி. மாஷ்ருவாலாவின் அறிக்கை

இப்பொழுது கைது செய்யப்பட்டிருக்கும் காந்தி சேவா சங்கத்தின் பழைய தலைவர் திரு. கே. ஜி. மாஷ்ருவாலா சேவா கிராமத்திலிருந்து ஆகஸ்ட் மாதம் 21-ம் திகதியன்று வெளியிட்டிருக்கும் அறிக்கையில் கூறுவதாவது:-

காந்திஜி இம்மாதம் 9-ந் திகதியன்று கைது செய்யப்பட்டார். இன்று 21 நாட்கள் ஆகின்றன. இதற்கிடையில் 15-ம் திகதியன்று காந்திஜியின் காரியதரிசியாக இருந்தவரான ஸ்ரீ. மஹாதேவ தேசாய் காலமானார். அரசாங்க அதிகாரிகள் அவரைத் தகனஞ் செய்த பிறகே அவர் மரணச் செய்தியை அரசாங்கத்தார் உலகிற்குத் தெரிவித்தனர்.

மஹாதேவ தேசாய் காலை 8-40 மணிக்குக் காலமானாரென்று அரசாங்க அறிக்கையிலிருந்து தெரிகிறது. ஆனால் அவருடைய மனைவிக்கு அச்செய்தியை அறிவிக்கும் தந்தி [illegible] தந்திக் கம்பிதாரில் இரவு 10-05 மணிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது அவர் மரணமான பிறகு 13½ மணி நேரம் கழித்து அத்தந்தி கொடுக்கப்பட்டிருக்கிறது.

கடந்த 13 தினங்களாக ஸ்ரீமதி துர்க்காபென் தேசாய்க்குக் காந்திஜியிடமிருந்து செய்தியொன்றும் வரவில்லை. அவரிடமிருந்து அனுதாபச் செய்திகூடக் கிடையாது. இம்மாதிரியே வெளியிலிருந்து அவருக்குச் செய்தி யொன்றும் போனதாகத் தெரியவில்லை. மஹாதேவ தேசாய் காந்திஜிக்கு எப்படியிருந்தாரென்பதையும் அவருடைய மரணத்தால் காந்திஜி எவ்வளவு தூரம் பாதிக்கப்படுவாரென்பதையும் காந்திஜியை அறிந்தவர்களுக்கு நன்கு தெரியும். காந்திஜியின் தற்போதைய தேக சுகத்தைப் பற்றியும் மனநிலைமையைப் பற்றியும் அவருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகிய எங்களுக்குப் பொது ஜனங்களைப் போலவே ஒன்றும் தெரியவில்லை. அவருடன் யார் யார் இருக்கின்றாரென்பதைப் பற்றி எங்களுக்குச் சரியான தகவல் இல்லை.

இவ்விஷயத்தைப் பொதுமக்கள் காலதாமதமில்லாமல் கவனிப்பாரென்று நம்புகிறேன்."

தெருக்களில் கலகக்காரர் கூட்டங்கள்

35 பேர் சுடப்பட்டனர்

சிந்துநதியில் பிரவாகம்

பம்பாய் ஆக 24—
(ஆகஸ்ட் 27ல் கிடைத்தது)

ஆகஸ்ட்மாதம் 19ந் திகதியன்று டம்ரேயான்—பக்ஸார் ஸ்தானில பல இடங்களில் கலகக் கூட்டங்கள் மீது பொலிசாரும் இராணுவத்தினரும் துப்பாக்கிப் பிரயோகம் செய்த பொழுது 17 பேர் கொல்லப்பட்டனரென்று ஆகஸ்ட் மாதம் 22ந் திகதி வெளியிடப்பட்ட பீஹார் அரசாங்க அறிக்கை யொன்று கூறுகிறது.

அஸான்ஸல்-பட்னா பாதையில் கலகக் கூட்டங்கள் மீது பல தடவை ராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபொழுது 18 பேர் கொல்லப்பட்டனர்.

முஸாபூர் ஜில்லாவிலுள்ள காட்ரா, மினாபூர் ஆகிய இடங்களில் பலத்த கலகங்கள் நடைபெற்றன. இரு இடங்களில் போலீஸ் ஸ்டேஷன்கள் அழிக்கப்பட்டன. காட்ராவைச் சேர்ந்த கான்ஸ்டபிள் ஒருவர் கொல்லப்பட்டார். ஒரு சப் இன்ஸ்பெக்டர் பலமாகக் காயமடைந்தார். மினாபூரில் ஒரு சப்இன்ஸ்பெக்டர் கொலைசெய்யப்பட்டு எரிக்கப்பட்டார்.

சாஸ்ராமில் கொள்ளைக் கூட்டத்தினைத் தலைவர்களாகக் கொண்ட ஒரு கூட்டத்தின்மீது இரு தடவை துப்பாக்கிப் பிரயோகம் செய்த பொழுது 17 பேர் கொல்லப்பட்டனர்.

ஆகஸ்ட் மாதம் 16ம் திகதிக்கும் 20ம் திகதிக்கு மிடையில் பீஹார் மாகாணத்தில் மற்றும் பல விடங்களில் ஐந்து தரம் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

பக்ஸாரில் பொது ஜனங்களில் ஒரு பகுதியினர் காடைத்தனத்தை எதிர்த்து வருகின்றனர்.

3000 பேர்களடங்கிய கூட்டம்

ஆகஸ்ட் மாதம் 22ந் திகதி சூரத் ஜில்லாவிலுள்ள முக்வாட் என்னுமிடத்தில் கலகக்காரருக்கும் பொலிசாருக்குமிடையே நடைபெற்ற ஒரு கலகத்தில் ஒரு போலீஸ் கான்ஸ்டேபிள் மரணமானதோடு மற்றும் நான்கு போலீஸ்காரர் காயமடைந்தனரென்றும் பம்பாய் அரசாங்கம் விடுத்த பத்திரிகைச் செய்தியொன்று கூறுகிறது. சுமார் 3000 ஆர்ப்பாட்டக்காரர் அடங்கிய கூட்டமொன்று கலைந்து செல்ல மறுத்துச் சிறு போலீஸ் கோஷ்டியொன்றைத் தாக்கிற்றென்று தெரிகிறது. ஆர்ப்பாட்டக்காரர்களில் இருவர் பொலிசாரின் துப்பாக்கிப் பிரயோகத்தால் கொல்லப்பட்டனரென்றும் மற்றும் சிலர் காயமடைந்தனரென்றும் தெரிகிறது.

லக்ஷ்மணபுரி ஆக 25—

உள்காட்டில் செய்யப்பட்ட இரண்டு வெடிகுண்டுகள் நேற்று அக்ராசகரில் வெடித்தன. இதனால் யாரும் காயமடையவில்லை. கோரக்பூர் ஜில்லாவிலுள்ள இரு கிராமங்கள் மீது முறையே 1500 பவுனும் 560 பவுனும் பொது அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது.

சிந்துநதியின் கோபம்

காராச்சி ஆக 27—

சிந்துநதி பெருக்கெடுக்கும் பொழுது டாடு ஜில்லாவிலுள்ள மேஹார் காயர்பூர் நதாண்ஷா என்னும் இரு நகரங்களிலும் வெள்ளப் பெருக்கு ஏற்படாதபடி தடுப்பதற்காக கட்டப்பட்டிருந்த அணைக்கட்டு நான்கு இடங்களில் உடைந்துபோனதால் மேற்படி இரு நகரங்களும் சிந்து நதியின் வெள்ளத்தில் மூழ்கி விடக்கூடிய ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. ஆனால் வெள்ளம் இப்பொழுது மேஹாரை நோக்கிப் பெருகுகிறது. இரு நகரங்களும் காலி செய்யப்படுகின்றன. வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருக்கும் பிரதேசங்களுக்குப் படகுகள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. சிந்துநதியில் பிரவாகம் இவ்வளவு ஜனங்கள் நெருங்கி வசிக்கும் 2500 சதுர மைல் விஸ்தீரணமுள்ள பிரதேசத்தில் பெருக்கெடுத்துப் பயிர்களைச் சம்பூரணமாகப் பாழாக்கி விட்டது. உயர்ந்த பூமியில் இங்குமங்குமாகவுள்ள சில குக்கிராமங்கள் நீங்கலாக ஏனைய கிராமங்கள் ஜலத்தில் மூழ்கியிருக்கின்றன.

இக்கால நம்பணி

"தினம்"

இப்பூவுலகின் கண் பற்பல ஜீவராசிகள் உண்டு. ஒவ்வோர் ஜீவராசிகளும் உண்ணுவதையும், உறங்குவதையும் உண்மைத் தொழிலாகக் கொண்டுள்ளன. ஆனால் மனிதப்பிறவியைத் தவிர்த்த ஏனைய ஜீவராசிகள், படைப்புக்காலம் தொடக்கம் இற்றைவரை, தத்தம் வாழ்க்கை முறைகளையும் தத்தம் வசிப்பிடங்களையும், ஆதியில் எவ்வாறு ஆரம்பித்தனவோ, அவ்வண்ணமாக இடையில் எவ்வித மாற்றமுமின்றி, நடாத்தி வருகின்றன. சில ஜீவராசிகளை மனிதன் தன் மானத துணையை ஆராய்ச்சியைக் கொண்டு, அதன இயற்கைக் குணங்களை மனுஷச் செய்து, தன் வாழ்க்கைக்குத் துணையாக்குகின்றான். மனிதப்பிறவியின் வாழ்க்கையோ, ஆதியில் ஆரம்பத்திலிருந்து இற்றைவரை, காலத்துக்குக்காலம் மாறுபட்ட வண்ணமாகவே, நடைபெறுகின்றது.

காலத்துக்குக்காலம், ஆங்காங்கு, முற்றத்துறந்த முனிவர்கள், பேரின்பத்தை யடைந்த யோகிகள், உண்மைப் பொருளைக் கண்ட ஞானிகள், இறைவனின் அருட்சக்தியை விளக்கிய சமயகுரவர்கள், கலைகளை வளர்த்த புலவர்கள், தேசத்தைப் பரிபாலித்த அரசர்கள், தன் சாகபத்தாருக்கு நல்வழி காட்டிய தலைவர்கள், தன் தாய்த் தேசத்தில் அன்புகொண்ட தேசபக்தர்கள் பலர் தோற்றியுள்ளார்கள்.

இப்போதைய உலகம், தேசபக்தர்களையே பின்பற்றுகின்றது. தலைவர்கள் பலரின் தலைமையில், "சர்வாதிகாரம்" என்ற ஆணைமை விஷயம், நீதியற்ற காரணமாக, இப்போது இந்த அசுர யுத்தம் நடைபெறுகின்றது. இந்நெருக்கடியைத் தீர்ப்பதற்கு இந்நெருக்கடியான நிலையில் ஏற்படும் கஷ்டங்களைச் சமாளிப்பதற்கு உத்தம தேசபக்தர்கள் பலர் முன்வர வேண்டும்.

சாதி சமயபேதம், கோழைத்தனம், இவைகளைக் களைந்து ஒருபுறமாக எறிந்து விட்டு ஏற்படப் போகும் அபாயங்களையும், அவைகளினின்று தப்பும் வகைகளையும், காருண்ணியமுள்ள அரசாங்கத்தின் உதவியுடன், நாட்டு மக்களுக்குத் தெரியச் செய்யவேண்டும். இவ்வித அவசியமான நேரத்தில் சமய சோம்பலமாக இருக்க முடியாது. ஒவ்வொரு ஆடவரும் தேசபக்தர்களாகவும், ஒவ்வொரு பெண்மணிகளும் தேசபக்தினிகளாகவும், வாழ்க்கையைச் செலுத்த வேண்டும். வரப்போகும் இளஞ் சிறுவர் சிறுமிகளை தேசநல பாதியாத வண்ணமாக, ஆங்காங்குள்ள செல்வர்களின் மனதை இரக்க மென்னும் ஊற்றை ஊறச் செய்து, பாடசாலை, போசனசாலை முதலியவைகளை ஏராளமாகத் தோற்றம் ஏற்படச் செய்யவேண்டும்.

நாம் இப்போது உணவு, உடை, தளபாடம் யாவும் அந்நிய நாட்டாரின் ஏற்றுமதியிலேயே தங்கியிருக்கச் செய்கின்றோம். நமது கமத்தொழில், கைத்தொழில், நெசவுத்தொழில், புதப்புது உணவு சேகரிக்கும் வகைகளைக்கொண்ட தொழில் யாவையும் வளர்ச்செய்ய வேண்டும். ஒருவருடைய பொருட்களைக் கொள்ளையடித்து ஜீவனைக் களைப் புசிப்பதை அடியோடு நீக்கவேண்டும். ஜீவ இரக்கமே சைவசமய சமூகத் தேவையாகும். இவைகளைப் படித்த வாலிபர்கள் பாமரசனங்களுக்குப் புகட்ட வேண்டும். உற்பத்தியை அடக்கினால், உணவுக்காக அரசின் தாரை ஓடி மறையும் என்பது திண்ணம். நிலபுலம் உள்ளவர்கள் இந்த நோக்கிய ஏழைமக்களுக்கு இலாபமான முறையில் உதவ முன்வர வேண்டும். நிலம் இருந்தும் இலகுவான முறையில் உதவாவிடின், அரசாட்சிப் பகுதியாருக்குத் தெரிவித்து ஏழைமக்கள் பயனடையக் கூடியதான ஒழுங்கை தேசபக்தர்கள் செய்துகொடுக்க வேண்டும்.

மண்ணெண்ணெய் வரத்துக் குறைந்து விட்டது; நாமமட்டும் எண்ணெயைச் சேகரிக்க வேண்டுமென்றாது, நம் முன்னோர் பழைய முறையாகப் பாவித்த எண்ணெய் வகைகளை உற்பத்திசெய்து, எரிக்கச் செய்யவேண்டும். இன்னும் எத்தனையோ கருமங்களை ஏழைமக்களுக்கு உதவக்கூடிய வகையில் செய்து முடிக்கலாம். எம் வீரர்கள் பேச்சளவாக இருப்பார்களன்றிக் கருமமாகச் செய்து முன்வர மாட்டார்கள்.

யாவரிடத்தும் ஒன்றுபோல் அன்பு பாராட்டாது வித்தியாசம்

வித்தியாசமாக வேற்றுமை பாராட்டி, சாதிமத சமயத்துவேஷத்தினால் ஏற்பட்ட இவ்வசுர யுத்தத்தை சமாளித்துச் சமரசப்படுத்த வேண்டுமானால் அன்பே சிவம், அன்பே கடவுள், என்ற சகல சமயக் கொள்கைகளையும் ஆதரித்த மகாத்மாகாந்தி யடிகளின் அஹிம்சையைக் கைக்கொண்டு நடக்க வேண்டுமென்பது அடிமையின் சித்தாந்தமாகும்.

கருணைத் தடக்கடலான கடவுளின் விசித்திர திருவிளையாடலை நம்மால் அறிய முடியுமா!

இந்திய குழப்ப நிலைமை

கள்ளுக் கடைக்குத் தீ வைக்கப்பட்டது

சென்னை, ஆக, 26—

நூறுபேர்களடங்கிய கூட்டமொன்று சிங்காநல்லூரில் கள்ளுக்கடை யொன்றைக் கொளுத்தித் தரை மட்டமாக்கிவிட்டுப் பொலிஸார் ஸ்தலத்துக்கு வருவதற்கு முன்பே மறைந்துவிட்டதென்று அரசாங்க அறிக்கையொன்று கூறுகிறது. ஆகஸ்ட் மாதம் 24-ந் திகதியன்று மாகாணத்தில் 18 டிஸ்திரிக்டுகளில் சம்பவமொன்றும் நடைபெறவில்லையென்றும் மற்ற டிஸ்திரிக்டுகளில் சிறு சிறு சம்பவங்களே நடைபெற்றனவென்றும் அறிவிக்கப்படுகிறது.

டில்லியில் மாகாணக் காங்கிரஸ் கொம்மிற்றிக் காரியதரிசியின் காரியாலயத்தைப் பொலிஸார் கைப்பற்றிப் பூட்டினர். அவருடைய சொத்தும் பறிமுதல் செய்யப்பட்டது. அவரைக் கைது செய்ய 'வாரண்டு' பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அவர் சரணடையவில்லை.

பம்பாயில் முன்னெச்சரிக்கையாக 'ஹைகோர்ட்டு' வாசல்கள் பாதுகாக்கப்படுகின்றன. பங்கு பரிவர்த்தனைக் காரியாலயத்தில் கருமையில் நடைபெற்ற சிறு சண்டையின் காரணமாகச் சிலதரகர்களும் தரகர்களது சிப்பந்திகளும் கைது செய்யப்பட்டனர்.

பீஹார் அரசாங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதன் சாராமாவது:-

இம்மாகாணத் தலைநகரத்திலும் அனேக டிஸ்திரிக்குகளிலும் நிலைமை அமைதியாக இருக்கின்றதென்றாலும் பீஹாரிலுள்ள கிராமங்களில் நிலைமை இன்னும் கலவரமாகவேயிருந்து வருகிறது. பாட்னாவில் போக்குவரத்து அபிவிருத்தி அடைந்திருக்கிறது.

4000 பேருள்ள கூட்டத்தில் துப்பாக்கிப் பிரயோகம்

கூட்டத்தைக் கலைப்பதற்காகப் பிகாரம் என்றவிடத்தில 4000 பேர்களுள்ள கூட்டத்தில் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

சென்ற 14, 15-ந் தேதிகளில் ஆசாவென்ற விடத்தில் ஒரு கூட்டம் புகுந்து தாக்கிய தென்றும் 15 தேதியன்று பஸாரா மத்திய சிறையைத் தாக்க முயற்சி செய்ததைத் தடுப்பதற்காகப் பிரயோகம் செய்ய சமாளிக்கப்பட்டதாயும் தாமதித்து வந்த தகவல்களிலிருந்து தெரிய வருகிறது.

பலவிடங்களில் இராணுவத்தினர் சுடப்பட்டனர்

16 ந்தேதியன்று இரவு பாட்னாவிலிருந்து இராணுவத்தைச் சேர்ந்த வாகன ஓர் கூட்டத்தில் துப்பாக்கிப் பிரயோகம் செய்யும்படி நேர்ப்பட்டது. மாகாணத்தின் பல இடங்களிலும் துப்பாக்கிப் பிரயோகம் செய்வது அவசியமாயிற்று. சோட்டா நாகபுரியில் நிலைமை அமைதியாயிருக்கிறது. ஆனால் [illegible] அப்படியில்லை.

தெருவில் நடமாடக்கூடாது

தடைகளை [illegible] தெருக்களில் மீண்டும் கூட்டமாய் நடைகள் ஏற்படாமல் செய்வதற்காகச் சில முக்கியமான பாதைகளில் நடமாடக்கூடாதென்று பாதுகாப்புச்சட்டப்படி உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

கல்கத்தாவில் அறுவர் கைது

கல்கத்தாவில் ஒரு பெண்மணியுள்பட ஆறுபேர்கள் கைது செய்யப்பட்டனரென்று வங்காள அரசாங்கத்தார் அறிவிக்கின்றனர்.

பம்பாய் கோர்ப்பொரேஷனில் இருந்துவரும் முட்டுக்கட்டையைப் போக்க தேசாதிபதி பம்பாய் நகரசபைச் சட்டத்தில் ஒரு திருத்தம் கொண்டுவந்திருக்கிறார். நகரசபைக் கூட்டத்தை நகரசபைத் தலைவரே கூட்ட இத்திருத்தம் அதிகாரமளிக்கிறது. கூட்டத்தின் கோரத்திற்கு அவசியமான எண்ணிக்கையும் குறைக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை—இந்திய உடன்படிக்கை

செய்திக்கு மறுப்பு

உப பிரதம காரியதரிசி சென்ற புதன்கிழமை பிற்பகல் பத்திரிகைகளுக்குவிடுத்த அறிக்கையொன்று கூறுவதாவது:—

இந்தியர் இலங்கைக்குக் குடியேறும் பிரச்னைகளைச் சம்பந்தப்பட்ட ஓர் உடன்படிக்கை இலங்கை-இந்திய அரசாங்கத்தார் கவனித்திருக்கின்றனர்.

இச்செய்தி அதிகாரிகளோடு விடுக்கப்படவில்லை. இது சரியானதல்ல. இரு அரசாங்கங்களுக்கிடையே ஏற்பட்டுள்ள ஏற்பாடுகளைக் குறிக்கவில்லை.

இந்தியாவிற் சில தலைவர்கள் விடுதலை

பர்த்வான் ஆக 18

இங்கு நேற்றமாலை கைது செய்யப்பட்ட காங்கிரஸ் தலைவர்களில் ஒருவர் இன்று விடுதலை செய்யப்பட்டார்.

பம்பாய்ப் பழைய மந்திரி

பெல்காம் ஆக 18

பம்பாய்ப் பழைய பொலிஷ் மந்திரி ஸ்ரீ ஏ. பி. லாதகே இன்று ஹிண்டல்கா சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்.

ஸ்ரீமான். கோவியன்

கள்ளிக்கோட்டை ஆக 19

சென்னை பொதுவுடைமை வழக்கு எதிரிகளில் ஒருவரும் கேரள விவசாயிகளின் பிரபல தலைவருமாகிய ஸ்ரீமான். கோவியன் அரசாங்க உத்தரவுப்படி விடுதலை செய்யப்பட்டார்.

'ஹரிஜன்'பத்திரிகை தடை செய்யப்பட்டது

பம்பாய், ஆக, 22—

ஹரிஜன் பத்திரிகையின் ஆகஸ்டு 17-ந் தேதி பிரசுரத்தில் சட்ட மறுப்பு இயக்கத்தைப் பற்றிச் சில ஆக்ஷேபகரமான வியாசங்கள் வெளியிட்டதால் மேற்கொண்டு 'ஹரிஜன் பத்ர' (அதாவது ஆங்கிலம், ஹிந்தி, குஜராத்தி பிரசுரங்கள்) ஆகியவற்றைப் பிரசுரிக்க வொட்டாது தடுத்துவிடும்படி பம்பாய் அரசாங்கம் ஆமதாபாத் டிஸ்திரிக் மாஜிஸ்டிரேட்டுக்குக்கட்டளை பிறப்பித்திருக்கிறார்கள். அதோடு அந்தப் பத்திரிகைகள் அச்சிடப்படும் அச்சுக்கூடத்தையுங் கைப்பற்றும்படி உத்தரவிடப்பட்டிருக்கிறது.

அச்சுக்கூடம் பறிமுதல்

மகாத்மாவின் 'ஹரிஜன்' பத்திரிகை அச்சிடப்படும் நவஜீவன் அச்சுக்கூடம் இன்று பூட்டிச் 'சீல்' வைக்கப்பட்டது. அதற்கு முன் அந்த அச்சுக்கூடத்தைப் பொலிஸாரால் சோதனையிட்டு பழைய பத்திரிகைப் பிரதிகளைக் கைப்பற்றினர்.

சர்வதேச சங்கமும் இந்தியாவும்

புதிய டில்லி ஆக 23

இந்தியசட்டசபையின் பொதுக் கணக்கு நிர்வாகசபை அரசாங்கத்தின் 1940-41-ம் வருஷத்திய கணக்கைப் பரிசீலித்து அறிக்கை தயாரித்திருக்கிறது. அதிலிருந்து வெளியான விபரம் இது:—

1939-40 இல் இந்தியசர்வதேச சங்கத்துக்கு ரூபா 7,50,000 செலுத்தியது. 1940-41 இல் மேற்படி தொகை ரூபா 9,41,000 ஆக உயர்ந்து விட்டது. சர்வதேச சங்கத்தில அங்கத்தினர் குறைந்து விட்டமையால் இந்தியாவின் பொறுப்பு இப்படி அதிகமாகிவிட்டது.

ஸ்ரீ லலிதா விலாச புத்தகசாலை

நல்லூர் யாழ்ப்பாணம்

எங்கள் புதிய வெளியீடு

வீரசோழியம்—பெருந்தேவனுரை விலை ரூபா 2-50

டாக்டர் உ. வே. சுவாமிநாதையர் பதிப்புகள், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பதிப்புகள், சைவசித்தாந்த கழக வெளியீடுகள், சக்தி மலர்கள், அன்பு நிலையம், கலைமகள், அல்லயன்ஸ், நவயுகப் பிரசுராலய வெளியீடுகளும் மற்றும் சகலவிதமான புஸ்தகங்களும் எங்களிடம் கிடைக்கும்.

Mis 105 31-8-42.

தந்தி டெலிபோன் போக்குவரத்து

விளம்பர இலாகா பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையொன்று பின்வருமாறு கூறுகிறது:—

பாதுகாப்புச் சட்ட விதியொன்று திருத்தி யமைக்கப்பட்டு, நேற்றைய அரசாங்க கெஜட்டில் வெளிவந்திருப்பது பொது மக்களின் கவனத்துக்குக் கொண்டுவரப்படுகிறது.

ஏற்கெனவே இருந்த விதியுடன் மற்றோர் புதிய பந்தி சேர்க்கப்பட்டிருக்கிறது. திருத்தி யமைக்கப்பட்ட விதியின் பிரகாரம், எவராவது ஒருவர் அதிகாரமின்றித் தந்தி அல்லது டெலிபோன் போக்குவரத்துக்கு வேண்டுமென்று இடைஞ்சலை உண்டுபண்ணுவாராகில் அல்லது குறித்த போக்குவரத்தைத் தடைசெய்வாராகில், குற்றவாளியெனக் காணப்பட்டால், அக்குற்றத்திற்கு அவர்மீது விதிக்கப்படும் தண்டனையுடன், சவுக்கடித் தண்டனையும் சேர்க்கப்படுகிறது.

இராணுவத்தைச் சேர்ந்த தந்தி, டெலிபோன் கம்பிகள் துண்டிக்கப்பட்டுத் திருட்டுப் போவது அதிகரித்து வருவதன் விளைவாகக் குறித்த விதியைத் திருத்தியமைக்க வேண்டிய அவசிய மேற்பட்டது.

குறித்த கம்பிகள் திருட்டுப் போவதன் விளைவாகச் செய்திப் போக்குவரத்து பாதிக்கப்பட்டு மோசமான விளைவுகள் நேரிடக்கூடும். இத்திருட்டுகளைத் தடைசெய்யும் பொருட்டு, தண்டனை விதிக்க வேண்டிய அவசிய மேற்படின் அவ்வாறு செய்யப்படும்.

திருச்சி—மதுரைப் புகைரதங்களில் விபத்து

திருச்சி, ஆக. 19—

திருச்சி-மதுரைப் புகைரதப் பாதையில் திருச்சி ஜங்ஷனுக்கு அடுத்த ஏறக்குறைய உள்ள பூங்குடிப் புகைரத நிலையத்துக்கருகில் இன்று அதிகாலையில் ஒரு 'குட்ஸ்' வண்டி போகும்போது, அதன் 12 வாகனங்கள் தண்டவாளத்தை விட்டிறங்கிக் கவிழ்ந்து விட்டதாகத் தெரிகிறது. தானியங்கள் முதலிய உணவுப் பொருள்களை 'குட்ஸ்' வண்டியில் ஏற்றிச்செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. இது விஷயமாகப் புகைரத அதிகாரிகள் ஸ்தலத்திற்குச் சென்றிருக்கின்றனர். பொலீஸ் 'ரிசேவ்' படையினரும் சென்று அவ்விடத்தில் வண்டிகளைப் பாதுகாத்து வருகின்றனர்.

விசேஷ யப்பானிய பாடப் புத்தகங்கள்

சூரிச், ஆக, 27—

ஜப்பானியர் தாங்கள் ஆக்கிரமித்துக் கொண்ட பிரதேசங்களில் ஆங்கிலம் வியாபார பாஷையாக இருந்து வருவதை ஒழிக்க முயலுவதாக டோக்கியோ நிருபர் ஒருவர் அறிவிக்கிறார்.

மலாய், பர்மியர், பிலிப்பைன் வாசிகள் அந்தமான் தீவுள்ளவர்கள் ஆகியவர்களுக்காகப் பிரத்தியேக யப்பானியப் பாடப் புத்தகங்கள் தயாரிக்கப்படுகின்றன. பின்பு ஜப்பான் பாஷை உத்தியோகப் பாஷையாகச் செய்யப்படும். இதனால் சுதேஷ பாஷைகள் பாதிக்கப்படமாட்டாதென்று டோக்கியோ கூறுகிறது.

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்

(ஸ்ரீ. அருள். தியாகராஜா அவர்கள் கொழும்பு (ரேடியோ நிலையத்தில்) வானொலியில் 19-7-42-ல் ஒலிபரப்பிய சொற்பொழிவாகும்)

செந்தமிழ்நாடு செய்த தவத்தின் பயனாய் உதித்த அந்தண சிகாமணியாகிய மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையருடைய புகழைத் தமிழுலகில் அறியாதவர் யார்? இவர் 1855-ம் ஆண்டு மாசிமீ 6-ந் திகதி உத்தமதான புரத்தில தமிழ் வளம் பெருகவும், தமிழ்க்கலை சிறக்கவும் திருவவதாரம் செய்தார்கள். இவர் தந்தையாரின்பெயர் வேங்கடசுப்பையராகும். ஐயரவர்களுக்கு அவர் தந்தையார் வைத்த பெயர் வேங்கடராமன் என்பது. பின்பு இவர் வித்தியா குருவாகிய ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள், இவர் பின் தமிழன்னைக்குச் செய்யப்போகும் தொண்டினை முன் உணர்ந்து போலும், இவர்களுக்குக் கும்ப முனிக்குத் தமிழிலக்கணம் உபதேசம் செய்த குமாரவேளின் திருநாமமாகிய சாமிநாதனென்ற பெயரை வைத்தழைத்தார்கள். ஸ்ரீ ஐயரவர்கள் தமிழில் படித்தறியாத இலக்கிய இலக்கண நூல்கள் இல்லையென்றே கூறலாம். ஆனபடியால தமிழ்த் தெய்வமாகிய முருகனின் பெயரை இவருக்கு இட்டழைத்தது மிகவும் பொருத்த முடையதேயாம். அந்தோ! இவர் சித்திரபானுஸு சித்திரைமீ 16உ (28-4-42) யாமெல்லோரும் கையாறாக் கலங்கும் வண்ணம் எம்மை விட்டகன்று இறைவன் திருவடியை அடைந்து விட்டார்.

இவர் தமது இளம் பிராயத்திலேயே, நாலடியார், நன்னூல், சூடாமணி நிகண்டு முதலிய நூல்களை நன்கு பாடம் பண்ணித் தமது ஆசிரியரிடம் ஒப்புவித்தார்கள். பின்பு இவர்கள் அக்காலத்தில் திருவாவடுதுறை யாதீன வித்துவானும், கவிச் சக்கரவர்த்தியுமாய் விளங்கிய மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளை யவர்களிடத்தில், தண்டியலங்காரம், யாப்பருங்கலக்காரிகை முதலிய இலக்கண நூல்களையும், பிறநூல்களையும் வரன்முறைப்படி பாடங்கேட்டு ஊக்கத்துடன் கற்றார்கள். இவ்வாறு நூல்களை இவர் நன்கு கற்ற பின்பு, கும்பகோணத்திலுள்ள கல்லூரியில் சிலகாலம் தமிழ்ப் பண்டிதராயிருந்து பின் சென்னை இராசதானிக் கல்லூரியில (Presidency College Madras) பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்குத் தமிழ்க் கல்வியை அவர்கள் மனங் கொள்ளும் வண்ணம் ஊட்டி வந்தார்கள்.

அந்தக் காலத்திலே கல்லூரிகளிலும் பள்ளிக்கூடங்களிலும் தமிழ் வகுப்பு ஏளனஞ் செய்யப்பட்டு வந்தது. (இக்காலத்திலுங் கூடச் சில இடங்களில் இது உண்டு) மாணவர்கள் தமிழ்ப் பண்டிதர்களைப் பரிகாசஞ் செய்வது சகஜமாயிருந்தது. ஆனால் எங்கள் ஐயரவர்கள் விஷயத்தில் இவ்வகையான நிகழ்ச்சிகள் ஒருகாலும் நடந்ததில்லை. மாணவர்கள் ஐயரவர்களுடன் மிக்க மரியாதையோடும் அன்போடும் நடந்து கொள்ளுவார்கள். இப்போது பல லாயிரக் கணக்கான மாணவர்கள் அவரைத் தமது பேராசிரியரென்று கூறுவதில் மகிழ்ச்சியும் பெருமையும் ஒருங்கடைகின்றார்கள்.

இவருக்கு இயற்கையிலேயே தமிழினிடத்து மிக்க பேரன்பு இருந்தது. ஒரு முறை இவர் தந்தையாரின் நண்பரொருவர் ஸ்ரீ ஐயரவர்களைச் சுட்டிக் காட்டி "இவன் என்ன படிக்கின்றான்" என்று இவரின் தந்தையாரை வினவினர். அப்பொழுது இவர் தந்தையார் அதற்கு விடையாக "இவன் தமிழ் படிக்கிறான்" என்று கூறினர். அப்பொழுது அந்த நண்பர் மிக்க ஆச்சரியத்துடன் "தமிழா படிக்கிறான்!" அரச பாஷையாகிய ஆங்கிலம் படித்தால் உயர்ந்த உத்தியோகம் எடுக்கலாம், பணம் சம்பாதிக்கலாம், இம்மைச் சிறப்படையலாம். தேவ பாஷையாகிய சமஸ்கிருதத்தைப் படித்தால விண்ணுலக வின்பத்தை யடையலாம். தமிழைப் பயில்வதனால் என்ன நன்மை!" என்று கூறினார். இதைக் கவனத்துடன் கேட்டுக் கொண்டிருந்த ஐயரவர்கள "இம் மநுஷன் கண்ணோட்டமின்றித் தயங்காது என்முன்னே இப்படிச் சொல்லுகின்றாரே. இவரைப்போல் மனிதரும் உலகத்தில் உண்டு" என்று தம்முட் கூறிக்கொண்டு ஒருவாறு தமது மனதைச் சாந்தி செய்து கொண்டார்கள்.

ஒருமுறை ஐயரவர்கள் 'தமிழ்விடு தூது' என்ற ஓர் சிறிய பிரபந்த நூலை ஆராய்ந்து கொண்டு வரும்பொழுது 151-ம் கண்ணியாகிய

> "இருந்தமிழே உன்னால்
> இருந்தேன் இமையோர்
> விருந்தமிழ்தம் என்றாலும்
> வேண்டேன்"

என்பது எங்கள் பேராசிரியர் மனதைக் கனிய வைத்து உருகச் செய்தது. அக்கருத்தை தம்முடைய கருத்தென்று தமிழுலகம் அறிய வேண்டும் என்ற பேரெண்ணமானது அவர்கள்பால் எழுந்தது:—

> "இருந்தமிழே உன்னால்
> இருந்தேன் இமையோர்
> விருந்தமிழ்தம் என்றாலும்
> வேண்டேன்—திருந்த
> உதிப்பித்த பன்னூல்
> ஒளிர அடியேன்
> பதிப்பிக்க வேகடைக்
> கண் பார்"

என்ற வெண்பாவாக முகிழ்த்தது. அது இப்பொழுது தக்க யாகப் பரணி முகவுரையின் முகப்பிலே காணப்படும். இவர்கள் 1887-ம் ஆண்டிலே சொற்சுவை, பொருட்சுவை, காவியச் சுவையுடையதும், மற்றுஞ் செந்தமிழ் நூல்களுக்கெல்லாம் உரையாணி போன்றதென்று புலவர்களாற் போற்றப்படும் சீவகசிந்தாமணி யென்னும் சைனநூலை மிக அரிதின் முயன்று பதிப்பித்தார்கள். 1889-ம் ஆண்டில் பத்துப்பாட்டு என்னுந் தன்னிகரில்லாத தனிச் செந்தமிழ்ப்பெருநூலை வெளியிட்டார். 1892-ம் ஆண்டில முத்தமிழ்ச் சுவை ததும்பி மிளிரும் நாடகக்காப்பியமாகிய சிலப்பதிகாரத்தை வெளியிட்டனர். 1894-ம் ஆண்டில் இவர்கள் அரும் பெருந் தமிழ்ப் பழ நாகரிக மாட்சியை இனிது விளக்கும் நூலாகிய புறநானூற்றை வெளிப்படுத்தினர். மற்றும் பதிற்றுப்பத்து, பரிபாடல், ஐங்குறுநூறு முதலிய சங்க நூல்களையும் மணிமேகலை யென்னும் சிறந்த புத்த காவியத்தையும், இவைகளைத் தொடர்ந்து வெளியிட்டார்கள்.

பெருங்கதை, நம்பி திருவிளையாடற் புராணம், நன்னூல் சங்கரநமச்சிவாயருரை, தக்கயாகப்பரணி உரை, கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்கள் முதலிய சிறு காப்பிய நூல்களையும், பல பட்டடைச் சொக்க நாதருலா, திருவாரூர்க்கோவை, திரு இலஞ்சி முருகன் உலா கச்சி ஆனந்த ருத்திரேசர் வண்டுவிடுதூது முதலிய கோவை, உலாவென்னும் சிறு பிரபந்தங்களையும் மிகச் சீரிய முறையில் பதிப்பித்துள்ளார்கள். நல்லுரைக்கோவை (நாலுபாகம்) உதயணன் சரித்திரச் சுருக்கம், மீனாட்சி சுந்தரம்பிள்ளை சரித்திரம் 2ம் பாகம் முதலியன, இவர் இயற்றிய வசன நூல்களாகும். தமிழ் நாட்டில் சங்க நூற் பயிற்சிக்கும், பண்டைச் சரித்திரவாராய்ச்சிக்கும் ஸ்ரீ ஐயரவர்களே மூலகாரணமாவர்.

ஏறக்குறைய சற்று ஆறு வருஷங்களுக்கு முன்னே ஏட்டுப் பிரதிகள் மிக்க அலங்கோலத்துடன் கிடந்தன. அதனால் தமிழ் நூல்களைப் படிப்பவர் தொகை அருகிக் கொண்டே வந்தது. "பழைய பிரதிகளுட் பல இனியழுப்பட வேண்டுமென்பதற்கு இடமில்லை, மற்றிழைய பொடிந்தது. அநேக வருடங்களாகத் தம்மைப் படிப்போரும் படிப்பிப்போரும் இல்லையென்பதையும் நூல்களைப் பெயர்த்தெழுதித் தொகுத்து வைத்தலையே விரதமாகக் கொண்டிருந்த சில புண்ணிய சாலிகளாலேயே தாம் உருக்கொண்டிருத்தலையும் நன்கு புலப்படுத்தின. ஓலைச்சுவடொன்று ஒவ்வாது பிறழ்ந்து குறைவுற்றுப் பழுதுபட்டுப் பொருட் டொடர் பின்றிக் கிடந்த இப்பிரதிகளைப் பரிசோதித்த துன்பங்களை உள்ளுங்கால உள்ள முருகும்"-சிலப்பதிகார முகவுரை—

ஏட்டுச் சுவடிகளிலுள்ள குறைவை முதன் முதல் உணர்ந்தவர் பெரியார் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலராவர். அதனலவர்கள் உலகப் பொதுநூலென்று எல்லோராலும் போற்றப்படும் திருக்குறளையும் கோவைகளிற் சிறந்த திருச்சிற்றம்பலக் கோவையாரையும் அச்சிற் பதிப்பித்து உதவினர்கள். இவர்களை அடிச்சுவட்டைப் பின்பற்றி ஸ்ரீ சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் தொல்காப்பியம், கலித்தொகை, இறையனார் களவியல், வீரசோழியம், இலக்கண விளக்கம் முதலிய நூல்களைப்பதிப்பித்தார்கள். ஆனால், இவர்கள் தொடங்கிய வேலையை இறைவனாவன் ஸ்ரீஐயரவர்களைக் கருவியாகக் கொண்டு முற்றுவித்திருக்கின்றார். திருக்கோவையார் முதற்பதிப்பிலே இனிப் பதிப்பிக்க வேண்டிய நூல்கள் என்று குறிப்பிட்டவிடத்திலே சீவக சிந்தாமணி, புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை, மணிமேகலை முதலிய நூல்களின் பெயரைக் காணலாம்.

ஐயரவர்கள் ஓர் உண்மையான பதிப்பாசிரியர். சில பதிப்பாசிரியர்களும், ஆராய்ச்சியாளர்களும், தங்கள் மனம்போன மாதிரிச் சற்றேனும் அஞ்சாதபடி, மூலபாடத்தை மாற்றியும், தங்களுடைய மனம்போன மாதிரிப் புதிதாகச் சேர்த்தும், பிரதி பாடங்கள் பல இருப்பின் அவைகளை நீக்கியும் பதிப்பித்தலைக் கண்டிருக்கின்றேன். ஐயரவர்கள் அப்படிச் செய்ததே கிடையாது. தாம் ஏட்டில் கண்டதையே நன்கு ஆராய்ந்த பின் வெளியிடுவார்கள். அதனைத் தம்முடைய விரதமாகக் கொண்டிருக்கின்றார்கள். உதாரணமாகச் சீவகசிந்தாமணி 8-ம் பக்கத்தில

"புராதனமான தமிழ்நூல்களும் உரைகளும் பண்டைவடிவங் குன்றாதிருத்தல் வேண்டுமென்பதே எனது நோக்கமாதலின், பிரதிகளில் இல்லாதவற்றைக் கூட்டியும், உள்ளவற்றை மாற்றியும், குறைத்தும் அஞ்சாது பதிப்பித்தேனலேன்! ஒருவகையாகப் பொருள் கொண்டு, பிரதிகளில் இருந்தவாறே பதிப்பித்தேன். யாதொன்றும் செய்திலேன்" என்றும்,

பெருங்கதையின் முகவுரையில 22-ம் பக்கத்தில "பழைய நூல்களைப் பழைய வடிவத்தினின்றும் வேறுபடாமலிருக்க வேண்டுமென்பதே எனது முழு நோக்கமாதலால் எவ்வளவு உழைக்க வேண்டுமோ அவ்வளவு ஆர உழைத்து இப்பதிப்பு நிறைவேற்றப் பெற்றது. என்னையறியாமல் பிழைகள் பல நேர்ந்திருக்கலாம். அவைகள் நாளடைவில் திருத்தமடைதல் கூடும்" என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஸ்ரீ ஐயரவர்களின் பதிப்பின் சிறப்பையும் உண்மையையும் நன்குணர்ந்தவராகிய பண்டித நாவலர் வேதாசலம்பிள்ளையவர்கள் (இவர் இப்பொழுது மறைமலையடிகள் என்று அழைக்கப்படுபவர்) ஐயருக்கு எழுதிய கடிதத்தின் ஓர்பகுதி வருமாறு:-

"செந்தமிழ் அணங்கிற்கு சந்த விளக்கனைய ஐய!

உங்களைப்போல நஞ் செந்தமிழ் நூல்கட்குப் பெருமையோடு இவ்வளவு உழைப்பெடுத்துக்கொண்டு சிறப்புச்செய்பவரலர் எவர் உளர்? என்பதனை நினையுந்தோறும், அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, முதலியனவுந் தங்கள் கையாற் பதிப்பிக்கப்படினல்லவோ அவை கவின் பெறும் என்னும் மற்றுமோர் நினைவும் உடனெழா நிற்கின்றது. எல்லாம்வல்ல ஆண்டவன் தங்கள் வாயிலாகவே அந்நூல்களை வெளியிடுவிக்க வேண்டுமென்று அவனை இறைஞ்சிப் பரவுகின்றேன். பல்லாவரம் 28-11-1911.

இவர் போதகாசிரியர், பதிப்பாசிரியர் நூலாசிரியராயிருப்பதனோடமையாது சிறந்த உரையாசிரியராகவும் திகழுகின்றார். குறுந்தொகை என்னுஞ் சங்க அகப்பொருள் நூலிற்கு இவர் சிறந்ததோர் உரை இயற்றியிருக்கின்றார். சில பேரறிஞர்கள் இவரை இக்காலத்து நச்சினார்க்கினியரென்று கூறுவர். இவருக்கு மகாமகோபாத்தியாய என்னும் பட்டம் எங்கள் மன்னர் பிரானாலும், தாக்ஷிணாத்திய கலாநிதியென்னும் பட்டம் கும்பகோண ஆதீனத்தாராலும் டாக்டர் (Doctor) என்னுஞ் சிறந்த பட்டம் சென்னைப்பல்கலைக்கழக அறிஞர் குழுவினராலும் வழங்கப்பட்டன. மதுரைத் தமிழ்ச்சங்கத்தினர் 1925-ம் ஆண்டில (5000)ரூபா ஐயாயிரம் அடங்கிய பொற்கிழியொன்று கொடுத்துக் கௌரவித்தார்கள்.

"பண்டைப் பனுவல் பாடறிந் தொழுக" எனக் கலித்தொகையில் கூறப்பட்ட நீதிமொழிக்கு ஐயரவர்கள் ஓர் இலக்கியமாக அமைந்தவர்கள். இதனால் இவருக்குச் சமயம், சாதி, தொழில், வயதென்ற வேறுபாடுடைய பலப்பலர்களுடைய நட்புக்கிடைத்தது. திருவாவடுதுறை ஆதீனம், திருப்பனந்தாள் ஆதீனம், தருமபுர ஆதீனம், முதலிய மடாதிபதிகளிடத்தில் பேரன்பு உடையவர். அவர்களால் பெரிதும் மனது மதிக்கப்பெற்றவர் பல வகையான உதவிகளை அவர்களிடம் பெற்றவர். எமது ஈழநாடாகிய இலங்கையிலுள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் மருகராகிய வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை ஸேர். பொன்னம்பலம் இராமநாதனவர்களின் தமையனாகிய பொ. குமாரசாமி முதலியார், சி. வை. தாமோதரம்பிள்ளை, சிற். கைலாசபிள்ளை, டாக்டர் கே. ஸ்ரீ காந்தா, முதலியவர்களிடத்தில் அன்பாயிருந்தவர். அவர்களின் உதவியை ஓரோவகையில் பெற்றவர். திருக்குறள், திருவாசகம் நாலடியார், முதலியவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த போப் ஐயர் (Dr. G. U. Pope) என்பவர் இவர்களின் முக்கிய நண்பராவர். அதனைப் புறநானூற்றின் முகவுரையால் காணலாம். பாரிஸ் (Paris) நகரிலுள்ள ஜே. வின்சன் (J. Vinson) அவர்கள் ஐயருக்குத் தமிழிலும் ஆங்கிலத்திலும் பல கடிதங்கள் எழுதியிருக்கின்றார்கள். பாரிஸ் நகரத்தின பெரிய நூதன சாலையிலுள்ள (Paris Museum) தமிழ்ச்சுவடிகளை ஆராய்ந்து சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் இரண்டு நூல்களும் இருப்பதாக அறிவித்தவர்.

உண்மையில் சென்னைத் தேசாதிபதி (Governor of Madras) ரவீந்திரநாத தாகூர் (Tha Late Dr. Rabindranath Tagore) அவர்களும் ஐயரவர்களின் நூல்நிலையத்தைப் பார்க்கச் சென்றிருந்தார்கள். 1935-ம் ஆண்டு மாசிமீ 6-ந் திகதி ஐயரவர்களுடைய 80-ம் ஆண்டு விழா நடந்தது. அன்று சிறந்த மகமதிய கனவானாகிய சேர். மகமத் உஸ்மான் (Sir. Mohamed Usman Sahib Bahadur) தலைமை வகித்து ஐயர் அவர்களைப் பாராட்டிப் பேசினார்கள். தமிழ் நாடெங்கும் அவ்விழாவானது கொண்டாடப்பட்டது. தமிழ்நாட்டு அறிஞரெல்லாம் சமூகமளித்துப் பேசினார்கள். சமூகமளிக்க வசதியில்லாதவர்கள் உபசாரப்பத்திரங்களை அனுப்பியிருந்தார்கள்.

பலமகாநாடுகளிலும் ஆண்டு விழாக் கூட்டங்களிலும், சங்கீத சபைகளிலும், ஐயரவர்கள் தலைமை வகித்தார்கள். சிலர் நெறிபிறழ்ந்து பேசினால், இவர் அவர்கள மனம் வருந்தாமல் மிருதுவாகக் கண்டித்து முடிவுரை கூறுவார்கள். இவர் மற்றவர்களுடைய அநாவசியமான கண்டனங்களைப் பொருட்படுத்தமாட்டார்கள். தாம் எடுத்த முயற்சியிலேயே தமது ஊக்கம் முழுவதையுஞ் சிதறாதபடி செலுத்துவார்கள். எமக்குத் தெரியாத ஐயங்களை இவர்களுக்கு யாம் எழுதும்போது மிக்கஅன்புடனே விடையளிப்பார்கள். எமக்கு இவரைப்போலத் திருப்திகரமாய் விடையளித்த பேரறிஞர்கள் இல்லையென்றே கூறலாம். ஒருமுறை ஆறுமாசங்களுக்கு முன்னே யான் எழுதிய கடிதத்திற்கு விடையளிக்கப்பிந்திவிட்டார்கள். அப்பொழுது அவர்கள் எழுதியதாவது "எனது முதுமையின் தளர்ச்சியாலும் வேறு பல தடைகளாலும் உடன்பதில் எழுத முடியாததையிட்டு வருந்துகின்றேன்" இவ்வாக்கியங்கள் அன்று எனமனத்தை உருக்கின, இன்றும் என உள்ளத்தை உருக்கிக்கொண்டேயிருக்கின்றன.

அந்தோ! தமிழ்த்தாயின் முதற்புதல்வர் பிரிந்தார்! எம் கண்மணி பிரிந்தார்! அவரை என்று இனிக் காண்போம்! எப்பொழுது காண்போம்! அவருடைய ஆன்மாவானது இறைவன் திருவடியில சாந்தியடையும்வண்ணம் யாமெல்லோரும் வணங்குவோமாக. தமிழ் மக்களாகிய எம்மிடத்தில் நன்றியீனமென்னுங் குணமானது சிறப்பாக அமைந்திருக்கிறதென்று முதியோர்கள் பலர் சொல்லக்கேட்டிருக்கிறேன். அதை யான் உண்மையென்றே நம்புகின்றேன். ஆனபடியால் இந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள தமிழ் மக்களெல்லாம் 'சங்கத் தமிழின் தலைமைப் புலவ'ராகிய ஐயரவர்கள் தமிழ் கூறும் நல்லுலகத்திற்குச் செய்த நன்றியை நினைவு கூர்வதற்காக ஓர் பெருநிதி திரட்டி ஐயரவர்களின் உருவச்சிலையொன்றை (Statue) நல்ல இடத்தில் நிறுவுவார்களாக.

தவறணையிலிருந்து ரூபா. 41,809 அதிக வசூல்

யாழ்ப்பாணம், ஆக, 27—

யாழ்ப்பாண டிஸ்திரிக்கைச் சேர்ந்த 9 சாராயத்தவறணைகளின் 1942-43-ம் வருடத்திய குத்தகைப் பணம் ரூபா 1,26,009 ஆகும். சம்பந்தப்பட்ட குத்தகைக்காரரைச் சேர்ந்த திரு. என். சுப்பிரமணியமாவர்.

முந்திய வருடம் வசூலான தொகையைவிட இவ்வருடத்திய தொகை ரூ. 41,809 அதிகமாக விருக்கிறது.

கொழும்பில் சொத்து வரிகள்

நகரசபையிற் கேட்கப்படவிருக்கும் கேள்விகள்

கொழும்பு நகரசபை ஐந்துமாதங்களுக்கு முன்னர் நிறைவேற்றிய தீர்மானமொன்றை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவருவதற்கு நிர்வாகசபையில் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதென்பதைப்பற்றி அடுத்த புதன் கிழமை நடைபெறவிருக்கும் நகரசபைக்கூட்டத்தில் கேள்விகள் கேட்கப்படவிருக்கின்றன. குறித்த தீர்மானத்தில் சொத்துவரியைக் குறைப்பதற்கான சட்டம் உடனே திருத்தியமைக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது.

செங்குந்த இளைஞர் கலாவிருத்திச் சங்கம் ஒட்டக்கூத்தர் விழா

28-8-42 புதன்கிழமை யாழ்ப்பாணம் செங்குந்த இளைஞர் கலாவிருத்திச் சங்கச் சார்பில் மேற்படி விழா மிக்க விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அன்று பகல் 12 மணியளவில் ஒட்டக்கூத்தர் பூசை நடைபெற்ற பின் ஐந்நூற்றுக்கணக்கான ஏழைகளுக்கு உணவு அளிக்கப்பட்டது. அதன் பின் ஒட்டக்கூத்தப் பெருமானின் திருவுருவப்படம் அலங்கரிக்கப்பட்ட மோட்டார் ரதத்தில் ஏற்றி மேளவாத்தியத்துடன் ஊர்வலஞ் செய்யப்பட்டது.

மாலை 6 மணியளவில் வடபகுதித் தலைமைத் தமிழ் வித்தியாதரிசி பிரமஸ்ரீ தி. சதாசிவஐயர் அவர்களின் தலைமையில் ஒரு பிரசங்கக் கூட்டம் நடைபெற்றது. தலைவர் ஆரம்ப வுரையில் ஒட்டக்கூத்தப் புலவரின் பெருமைகளை விபரித்து பாராட்டினர். அதன்பின், மேற்படி சங்க அங்கத்தவர்களான பண்டிதர் மு. நவரத்தினம் அவர்களும் பண்டிதர் ச. இராமச்சந்திரன் அவர்களும் பண்டித பரீட்சையில் சித்தி எய்தியதற்காக அவர்களுக்குச் சங்கச் சார்பாக மாலை சூட்டிப் பட்டணிந்து பரிசில்கள் வழங்கி வரவேற்புபசாரம் நடாத்தப்பட்டது. பின்னர், பரமேசுவர பண்டிதாசிரிய கலாசாலைப் பேராசிரியர் பிரமஸ்ரீ ச. நவநீத கிருஷ்ணபாரதியார் அவர்கள் 'ஒட்டக்கூத்தர் கவிவளம்" என்னும் பொருள்பற்றி எப்படிப்பட்டவன் புலவன்? அவன் கவி எப்படிப்பட்டது? ஒட்டக்கூத்தரின் அமைந்த கவிவளம் என்ன! என்றின்னோரன்ன விஷயங்களைப் போதிய எடுத்துக் காட்டுகள் வாயிலாக ஒரு பெருஞ் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அதன்பின், குலசேகரன் பட்டினம், 'திருவள்ளுவர் அகம்' சைவத்திருவாளர் ப. இராமநாத பிள்ளை அவர்களால் புலவர்' என்னும் விஷயம் புறநானூற்றையும் பிறநூல்களையும் ஆதாரமாகக் கொண்டு விரிவுரை செய்யப்பட்டது. தலைவர் முடிவுரையின் பின் பண்டிதர் சு. இராசையா அவர்கள் எல்லோருக்கும் நன்றி கூறியதுடன் மேற்படி விழாவுக்கு உதவி புரிந்த உள்ளூரவர்களுக்கும் வெளியூரவர்களுக்கும் சங்கச் சார்பாக நன்றி கூறினர். கூட்டம் இரவு 9 மணியளவில் இனிது நிறைவெய்தியது.

—நிருபர்.

ஜப்பான் கப்பல்களுக்குப் பலத்த நஷ்டம்

நியூகினியாவில் யுத்தம் நடைபெறுகிறது

சிட்னி, ஆக, 28—

நியூகினியாவில மில்னே குடாவில் ஜப்பானியர் இறங்குவதைத் தடுக்க முடியாததற்குக் காரணம் மோசமான சீதோஷ்ண நிலையே என்று தெரிகிறது. ஜப்பானியக் கப்பல்கள் கரையை அணுகிய பொழுது நமது விமானங்கள் அவைகளைத் தாக்கி ஏராளமான சேதம் விளைவித்தன.

கிழக்கோரத்திலுள்ள இரண்டு தீபகற்பங்களுக்கிடையே யுள்ள கடற்கரையில உக்கிரமான போர் நடைபெற்று வருகிறது.

நேசதேசத் தலைமைக் காரியாலய பகுதியிலிருந்து வெளியிடப்பட்ட அறிக்கை யொன்று கூறுவதாவது:

நமது பலத்த விமான எதிர்ப்புகளிடையே மில்னே குடாவில் ஜப்பானியக் கப்பலொன்று மூழ்கடிக்கப்பட்டது. ஜப்பானிய நாசகாரி மூழ்கடிக்கப்பட்டிருக்கலாம். நாசகாரி யொன்று சேதப்படுத்தப்பட்டது.

காந்திஜி முஸ்லிம் நண்பர் கடிதப் போக்கு வரத்து

முஸ்லிம் லீக்கிடம் அதிகாரத்தை மாற்ற

காங்கிரஸுக்கு ஆட்சேபமில்லை

பம்பாய் ஆக 19—

பிரிட்டிஷ் அரசாங்கம் இன்று தாங்கள் செலுத்தி வரும் முழு அதிகாரத்தையும் முஸ்லிம் லீகுக்கு மாற்றும் பட்சத்தில் காங்கிரஸுக்கு எவ்வித ஆட்சேபமும் இருக்காது என்று மௌலானா அபுல்கலாம் ஆஸாத் உறுதி கூறினார். ஜனங்களின் சார்பாக முஸ்லிம் லீக் எவ்விதமான அரசாங்கத்தை அமைத்தபோதிலும் காங்கிரஸ் அதற்குத் தடையாக விராது. ஆதேதடில்லாமல் சுதந்திர அரசாங்கத்தை நடத்தும் விஷயத்தில் காங்கிரஸ் அந்த அரசாங்கத்துடன் சேருமென்றும் ஆஸாத் தெரிவித்தார். இது உண்மையில் முழுப் பொறுப்புடன் தெரிவித்த உறுதியாகும் என்று பம்பாயில் உள்ள முஸ்லிம் நண்பர் ஒருவருக்கு மகாத்மா காந்தி எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

கடிதப் போக்கு வரத்து

இந்தக் கடிதப் போக்குவரத்தைப் பற்றிய விவரங்களை காண்டிடன் இன்று "டைம்ஸ் ஆப் இந்தியா"வில் கொடுத்திருக்கிறார். அவர் எழுதியிருப்பதாவது:—

இடைக்கால ஏற்பாடு சம்பந்தமாகக் காலஞ்சென்ற ஸ்ரீ மஹாதேவ தேசாய் என்னிடம் தெரிவித்த குறிப்புகளைக் கொடுக்கிறேன். அவை கைது செய்யப்படுவதற்குச் சில மணி நேரத்துக்கு முன்பாக காந்திஜிக்கும் பம்பாய் முஸ்லிம் ஒருவருக்கு மிடையே நடந்த கடிதப் போக்குவரத்திலிருந்த பகுதிகளாகும்.

காந்திஜிக்கு எழுதிய கடிதம்

"முஸ்லிம் லீக்கிடம் அதிகாரத்தை ஒப்படைப்பது குறித்து மௌலானா ஆஸாத் விடுத்த அறிக்கை சம்பந்தமாக இன்று நான் ஸ்ரீ மகாதேவ தேசாயுடன் மனம் விட்டுப் பேசினேன். அந்த அறிக்கையிலுள்ள உட்கருத்துகள் பற்றி எனக்குச் சந்தேகங்களிருந்தமையால் விளக்கிச் சொல்லும்படி ஸ்ரீ தேசாயைக் கேட்டுக் கொண்டேன். பொது ஜனங்களின் நன்மையைக் கருதி இதுபற்றி விளக்கம் வேண்டும். ஸ்ரீ மகாதேவ தேசாயுடன் சம்பாஷித்ததின் விளைவாக நானே ஜனாப் ஜின்னாவைப் போய்ப் பார்த்து ஸ்ரீ தேசாய் தெரிவித்த விளக்கத்தை அவரிடம் சொன்னேன். எந்தவிதமான யோசனையும் ஜாக்கிரதையாகப் பரிசீலனை செய்வதாக ஜனாப் ஜின்னா என்னிடம் சொன்னார். மேற்படி யோசனைபற்றி அவர் கடுமையாகக் குற்றங்கள் கூறினார். ஆனால் இந்த யோசனை உண்மையாகவே தெரிவிக்கப்பட்டதென்று அவரைத் திருப்திப்படுத்தினால், அவர் தாம் தெரிவித்த குற்றச்சாட்டுகளை வாபஸ் பெற்று வருத்தம் தெரிவிப்பார். இவ்விஷயத்தில் அவர் கிரமமாக நடப்பதாகவே நான் கருதுகிறேன்."

காந்திஜி கடிதம்

மேற்படி பம்பாய் முஸ்லிம் நண்பருக்கு மகாத்மாஜி பின்வருமாறு பதில் எழுதியிருக்கிறார்:—

காய்தே அஜாமுடன் இன்று தாங்கள் நடத்திய சம்பாஷணை நோக்கத்தைப் பற்றி நான் தெளிவான பாஷையில் விஷயத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். "ஹரிஜன்" கட்டுரை யொன்றில் முஸ்லிம் லீக்கு மௌலானா ஆஸாத் தெரிவித்த யோசனையைத் திரும்பவும் பிரசுரித்தேன். அந்த யோசனை பூர்ண அர்த்தங்களுடன் கூடிய உண்மையான யோசனை யென்றே நான் கருதினேன். தங்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காக அதை மீண்டும் விளக்கிச் சொல்லுகிறேன். அந்நியர்களின் படையெடுப்பைத் தடுத்து சீனாவுக்கும் ருஷ்யாவுக்கும் உதவி செய்ய நேச நாட்டுத் துருப்புகள் சுதந்திர இந்தியாவில் இருக்கலாமென்ற நிபந்தனையின் பேரில் இந்தியாவுக்குப் பரிபூரண சுதந்திரமளிக்கவேண்டுமென்ற காங்கிரஸ் கோரிக்கையை லீக் ஒப்புக்கொள்ளுமானால், அங்ஙனம் செய்யும் பட்சத்தில் இன்று பிரிட்டிஷ் அரசாங்கம் செலுத்திவரும் சகல அதிகாரத்தையும் முஸ்லிம் லீகிடம் மாற்றுவதில் காங்கிரஸுக்கு எவ்வித ஆட்சேபமும் கிடையாது. ஜனங்களின் சார்பாக லீக் எவ்விதமான அரசாங்கத்தை அமைத்த போதிலும் அதற்குக் காங்கிரஸ் எவ்வித தடையையும் செய்யாது. சுயாதீனமுடன் சுதந்திர அரசாங்கத்தை நடத்துவதற்காக அந்த அரசாங்கத்துடனும் காங்கிரஸ் சேரும். இது உண்மையாக அந்தரங்க சுத்தியுடன் தெரிவித்த யோசனை. எனவே அந்த யோசனையின் உட்கருத்துகளை யெல்லாம் தெரிவித்து அதனால் ஏற்படக்கூடிய முக்கியமான விளைவுகளைப் பற்றி அவசரமாகப் பதில் தெரிவிப்பது முடியாத காரியம். இக்கடிதத்தை தாங்கள் காய்தே அஜாமிடமும் உடனே இந்தியாவுக்குச் சுதந்திரம் வேண்டுமென்று கோருவோரிடமும் காட்டலாம்.

மிகவும் முக்கியமான மேற்படி வாரத்தில் காரியக்கமிட்டியும் காந்திஜியும் ஜனாப் ஜின்னாவுக்கு இதுபற்றியும் இதர விஷயங்களைக் குறித்தும் ஓர் கடிதம் எழுதவேண்டுமென்று யோசித்து வந்ததாயும் "சாண்டிடன்" தெரிவித்திருக்கிறார்.

இந்திய பிரபல வானசாஸ்திரிகள்

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

நந்தி (Vsjayanandhi) என்பவர்களாம். இவர்களுள் எடதேவர் ஆகிய பட்டரின் மாணாக்கர். சிம்மாசாரியர் இலங்கையில் சூரியோதயத்தில் வானசாஸ்திர முதல் திகதி தொடங்கியதாகக் கொண்டவர். பிரத்யும்னர் செவ்வாய், சனி, ஆகிய கிரகங்களின் சலனத்தை ஆராய்ந்தவர். விஜயநந்தி புதனைப்பற்றி மிக்க ஆராய்ச்சி செய்தவர். வசிஷ்ட சித்தாந்தத்தின் ஆசிரியரும் இவராவர்.

பிரமகுப்தர் கி. பி. 598

வராஹமிஹிரருக்கு அடுத்த வானநூல் வல்லுனர் பிரம குப்தராவர். இவர் கி. பி. 598-ல் பிறந்தவர். ஜிஷ்ணுகுப்தர் இவர் தகப்பனார். 36-ம் வயதில் பிரமஸ்புடசித்தாந்தத்தையும், 76-ம் வயதில் கண்டகாத்தியகத்தையும் இயற்றினர். கண்டகாத்தியகத்தில் கிரகங்களின் கிழக்கு மேற்குத் (Longitudes of Planets) தூரம் கணிக்கும் முறையானது கூறப்பட்டுளது. பிரமஸ்புட சித்தாந்தத்தில் ஆரியபட்டருடைய சில முறைகள் திருத்தியும் விளக்கியும் கூறப்பட்டுள்ளன. இந்நூலகணிதத்திற் காணப்படும் சில அரிய முறைகளாவன:-

(A) மந்த (Manda), சீக்கிர (Sigra) கதிவேறுபாடுகளால் தாக்கப்படுகின்ற கிரகங்களின் உண்மை நிலைப்படி அறியும் முறை.

(B) சுத்தமான லம்பன சமீகரணத்தைத் தனிப்பட்ட அட்சாம்சங்களிற் கூறும்முறை.

(C) சூரியனது உதயாஸ்தத்தை எந்த நகரிலும் தென்கீழ் தென்மேல் லம்பங்களில் காணுமுறை.

(D) திருக்கர்ம (Drihhkarma)வுக்குரிய மிகச்சுத்தமான சம்பகரணமுறை.

(E) வலனு (Valana) வைப்பற்றி மிகச்சுத்தமான விளக்கம்.

(F) அவிரோதமான சம்ஸ்காரமாகிய சுத்தமான சம்ஸ்காரமுறையைக் கண்டு உபயோகித்தல் ஆகியனவாகும்.

மேலும் பிரமகுப்தர் தாம் மேலே கூறப்பட்ட இரு நூலகளையும் இயற்றிய காரணத்தை இரு சுலோகங்களிற் கூறியுள்ளார். அவ்வாறெனின் :-

(A) ஆரியபட ஸ்ரீஷேண விஷ்ணுசந்திரோதித குழாதயஸ்தேந விதுஷாம வைவர்தம் சந்தானர். ஸ்ரீஷேணர், ஆரியபட்டர், விஷ்ணு சந்திரர் ஆகியோர் இயற்றிய நூல்களிற் சொல்லப்பட்ட செய்யாய ஆகியாகவுள்ள கிரகங்களின் உண்மையான நிலை தவறிவிட்டமையால (அதாவது பிரத்தியட்சத்துக்குச் சரிவராததால) அவற்றை அந்நூல்களைக் கைக்கொள்ள வில்லை.

(B) ஸ்புடம் ஆரியபடோக்த லம்பனகாரணம், யதர்த்தோ வக்ஷ்யே, பாதுமைந்தர மந்தராச்ச ராசித்துவயம் அயசகாச்ச ஸபக்ஷ. கிரகங்களுடைய உண்மையான நிலையை அறிவதற்கு ஆரியபட்டர் கூறிய முறையானது தவறு போது பிரத்தியட்சத்துக்குச் சரிவராமையால், பின்வரும் முறையைக் கூறுகின்றேன் என்கின்றார்.

(வரும்)

ஓரே ரிக்ஷோவில் இருவர்

பிரயாணஞ் செய்வதற்குத் தடை

ஒரே ரிக்ஷோவில் இரு ஆட்கள் பிரயாணஞ் செய்வதைத் தடை செய்யும் பொருட்டுச் சமீபத்தில் ஒரு சட்டம் ஏற்படுத்தப்பட விருக்கிறது.

ஸ்தல ஸ்தாபன நிர்வாகசபை சென்ற புதன்கிழமை கூடிய பொழுது மேற்கூறியவாறு தீர்மானித்தது.

அநுராதபுரப் பிரதிநிதி மிஸ்டர். எச். ஆர். பிரீமன் இதுபற்றிப் பிரச்னையொன்றை அரசாங்கசபையிற் கிளப்பியிருந்தார். அதுபற்றி எவ்வித நடவடிக்கையும் எடுக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறதா வென்று கொழும்பு நகரசபை வினவியதன் பலனாக நிர்வாகசபை குறித்த பிரச்னையைப் பரிசீலனை செய்தது.

பிரச்னை கிளம்பிய விதம்

இலங்கைக்கு விஜயஞ் செய்யும் சிலர் நகரிலுள்ள சில தெருக்களில் விஷமஞ் செய்வதன் பலனாகவே இப்பிரச்னை அரசாங்கசபையிற் கிளப்பப்பட்டது. ஒரே ரிக்ஷோவில் ஒருவருக்கதிகமாகப் பிரயாணஞ் செய்வதன் பலனாகப் பல ரிக்ஷோக்கள் சேதமடைந்த துண்டு.

இவ்வழக்கத்தைத் தடுக்கும் பொருட்டு ஒரு சட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்று நிர்வாகசபை தீர்மானித்தது. ஆனால், இந்நடவடிக்கையைக் கையாளுவதற்காக ஒரு வயதானவரும் ஒரு குழந்தையும் ஒரு ரிக்ஷோவில் பிரயாணஞ் செய்வதைத் தடை செய்து கஷ்டத்தைப் புண்படுத்தக் கூடாதென்று கொம்மிற்றி அபிப்பிராயப்பட்டது. எனவே, இரு ஆட்கள் ஒரே ரிக்ஷோவில் பிரயாணஞ் செய்வதை மட்டும் தடை செய்யும் பொருட்டுத் திருத்தச் சட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்று குறித்த கொம்மிற்றி சிபார்சு செய்திருக்கிறது.

நெற்காணி விற்பனைக்கு

43 பரப்பு அரியாலையில் காசிப்பிள்ளையின் கட்டுக்கருகிலும் 40 பரப்பு கோப்பாயிலும் இருக்கிறது. வேண்டியவர்கள் வி. தாமோதரம்பிள்ளை சாவகச்சேரிக்கு எழுதி அறிந்துகொள்ளலாம்.

8—8—42

Mis 99—13.8—12.9.42

தலைமை யாசிரியைகளின் பிரதிநிதி

சர்வகலாசாலைக் 'கோர்ட்'டுக்குத் தேரிவு

இலங்கைச் சர்வகலாசாலைக் கோர்ட்டில் இலங்கைத் தலைமையாசிரியர்கள் சங்கத்தின் பிரதிநிதியாக இருப்பதற்குக் கொழும்பு லேடீஸ் கலாசாலைத் தலைமை யாசிரியையான செல்வி ஜீ. எப். ஓப்பி தெரிவு செய்யப்பட்டார்.

உணவுப் பொருட் காட்சி

கண்டியில் வைபவம்

கண்டி ஆக 23—

நேற்றைய தினம் கண்டியில் நடைபெற்ற உணவுப் பொருட்காட்சியில் இலங்கையில் உற்பத்தியான உணவுப் பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட நாநாவிதமான தின்பண்டங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன. அப்பொழுது நடைபெற்ற விருந்துக்கு மேன்மை தங்கிய தேசாதிபதி தலைமை வகித்தார். சோறும் காய் கறிவகையும் மற்றும் உணவு வகையும் மிகவும் திருப்திகரமாக விருந்ததாகத் தேசாதிபதி தெரிவித்துச் சுருக்கமான ஓர் சொற்பொழிவாற்றினார்.

விவசாய சுகாதார மந்திரிமார், மேஜர் ஜெனரல் இன்ஸ்கிப், தோட்டத்துரைமார் சங்கத் தலைவர் மிஸ்டர். என். எச். டப்ளியூ. டியூலிக் கண்டி மேயர் பொருட்காட்சியை ஒழுங்கு செய்த காரியதரிசி மிஸ்டர். டப்ளியூ. மொலமோகோ — ஆதியோரும் மற்றையோரும் பல பிரமுகர்களும் இவ்வைபவத்திற் கலந்து கொண்டனர்.

நேற்றைய தினம் முழுவதும் ஆயிரக்கணக்கான மக்கள் இப்பொருட்காட்சிக்கு விஜயஞ் செய்து களிப்புற்றார்கள்.

பத்திரக் கிரயம்

1942-ம் ஆண்டு ஏப்பிறில் மாதத் தொடக்கமாக
யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபையார்

தாங்கள் நடாத்தும் இந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரதிகட்குச்

சமயோசிதமாகப் பின்வருமாறு பத்திரக்கிரயத்தைச் சிறிது உயர்த்தியுள்ளார்:-

இந்துசாதனம் தமிழ்ப்பிரதி,	வருடமொன்றிற்கு	பட்டின எல்லையுள்	6.50
,, ஆங்கிலப்பிரதி	,,	,,	6.50
இரு பிரதிகளுஞ் சேர்த்து	,,	,,	10.50
தமிழ்ப்பிரதி	,,	பிறவூர்கட்கு	9.50
ஆங்கிலப்பிரதி	,,	,,	9.50
இரு பிரதிகளுஞ் சேர்த்து	,,	,,	13.50

தனிப்பிரதி 7 சதம்

வெளிவந்துவிட்டது!

சைவ சித்தாந்த உண்மை

சைவ சித்தாந்த சாத்திரங்களைப் பயிலவிரும்பும் ஆங்கில மாணவருக்கு இந்நூல் பெரிதும் பயன்படக்கூடியமுறையில், "விஞ்ஞான சாத்திரமாணவ" ரொருவரால் இந்துசாதன ஆங்கிலப் பிரசுரத்திற் காலந்தோறும் எழுதி வெளியிடப்பெற்று வந்தது; இதனை இப்பொழுது யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையார் தொகுத்துப் புத்தகவடிவிற் பலர்க்கும்பயன்படும் வண்ணம அச்சிட்டு வெளியிட்டுள்ளனர். இது பதினேந்து அதிகாரங்களைக் கொண்டது; திருவாளர் சு. சிவபாதசுந்தரமவர்கள் எழுதிய முன்முகத்தோடு கூடியது. 100 பக்கங்கள் வரையிற் கொண்டது. சைவமக்களெல்லாரும் இலகுவில் வாங்கிப் படிக்கவேண்டுமென்ற நோக்கம்பற்றிப் பிரதியொன்று விலைகுறைந்து 50 சதமென விதிக்கப்பட்டுள்ளது. பெறவிரும்புவோர், மனேஜர், யாழ்ப்பாணம் சைவப்பிரகாசயந்திரசாலை, வண்ணார்பண்ணை என்ற விலாசத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விளம்பர விகிதம்

முதன் முறைக்கு

ஒரு கலம் ரூபா 10-00 அரைக்கலம் ரூபா 5-50
கால் கலம் ரூபா 4-00 ஒரு அங்குலம் ரூ. 1-00

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி

காலம் நீடித்த விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்து மூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படாத விளம்பரங்கள் ஏற்கப்பட மாட்டா.

பிரதானமான அறிவித்தல்

லைசென்ஸ்பெற்ற பல்லுக்கட்டுபவரும்
கண்பரிசோதகருமாகிய
மிஸ்டர், S. சாஸ் பத்திரானா

இப்போது கிறைஸ்ட் சர்ச்சுக்கெதிரே மெயின்ஸ்ட்ரீட்டில் 43-ம் நம்பர் இல்லத்தில் இருக்கிறார்.

இவர் ஒவ்வொரு மாசத்திலும் 1-ந் திகதி தொடக்கம் 15-ம் திகதிவரை அங்கு இருப்பார்.

ஏனைய நாட்களில் பின்வரும்விலாசத்திற்குக் கடிதங்களை அனுப்புக
தம்பராவாத் தோட்டம், வரிப்பம்பொலா, வடமேல்மாகாணம்.

Y115 18-8-42—17-11-42

இருமல், இளைப்பு

சுகமானவர் மதிப்புரை.

கொழும்பில் 112, 2ம் குறுக்குத்தெருவில் ஓர் பிரபல ஜவுளிவர்த்தகர் சொல்லும் செய்தி:—

ஸ்ரீ. M. S. மரைக்காயர்

"ஆஸ்துமா" என்னும் இருமல், இளைப்பு, சுவாச காச நோயால் நான் இரண்டுவருஷகாலம் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன்.

தண்டபாணி வைத்திய சாலையில்

தாளகபஸ்பமும் சித்திரமூலச் சூரணமும் ரூ. 12-50க்கு வாங்கி 25நாள் சாப்பிட்டேன். நோயின் கஷ்டங்கள் நீங்கிச் சுகமடைந்தேன்.

பின்பு இதுவரை 2வருடங்களாகியும் எனக்கு நோய் திரும்ப வரவில்லை. திடகாத்திரமாக இருக்கிறேன். என்னைப் பார்த்துவிட்டுச் சுமார் 100 பேர்கள் வரை தங்களிடம் மருந்து சாப்பிட்டுச் சுகமடைந்திருக்கிறார்கள். தங்களுக்கு என்றும் மறவாத நன்றி செலுத்துகிறேன். 19-10-40.

(ஒப்பம்) E. A. M. S. மரைக்காயர்.

இருமல், இளைப்பு, காசம், க்ஷயம், பீனிசம், தமேல் நோய்களுக்கு

25 நாள் தாளக பஸ்பம்
,, சித்திர மூலச் சூரணம் } ரூ. 12-50

நோய் விவரம் எழுதவும். கேட்லாக் இலவசம்

தண்டபாணி வைத்தியசாலை,

பழனி (PALNI, S. India)

(Q. 59. 18-6-42—17-9-42) (வி)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

முன்னேச்சுரம்

முதலாம்பக்கத் தொடர்ச்சி

மாயவனாற்றைப் பற்றிய புராண வரலாறு பின்வருமாறு:- முன்னொரு காலத்திலே விஷ்ணு மோகினி வேடந் தரித்தார். சிவபிரான் பிட்சாடன மூர்த்தியாயினார். பிட்சாடனத் திருக்கோலத்தைக் கண்டு மோகித்த மோகினி தன்னைக் கலந்து கொள்ள வேண்டுமென்று யாசித்தார். அவ்வாறு அரியும் அரனும் கலந்து அரிஹரபுத்திரனார் அல்லது ஐயனார் அவதரித்தார். இவ்வாறான பின் மாயவன் தன்னை என்றும் இவ்வாறே கலந்திருக்க வேண்டும் என்று எம்பிரானைக் கேட்க அவர் "நல்லது நீ இந்த இடத்தில் ஆறுகப் பிரவாகித்துக் கொண்டிரு. நாம் வருடந்தோறும் ஆவணி மாசப் பூரணையில் வந்து கலப்போம்" என்று அருளினர். நிகழும் ஆவணி மாசம் 26-ந் திகதி அத்தகைய பௌர்ணிமை தினமாகும்.

முன்னேச்சுர வரலாறு கர்ப்பக்கிரகத்தச் சுவர்ப்புறக் கல்லிலே வரையப்பட்டிருக்கின்றது. இதைத் தக்ஷண கைலாச புராணத்தில் 15-ம் 16-ம் அத்தியாயங்களிலே பார்க்கக் காணலாம்.

குருசந்திரயோக பலன்

பிரம்மஸ்ரீ. ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள் சுதுமலை

வியாழனுஞ் சந்திரனும் ஒரே இராசியிற் சேர்ந்திருப்பது தோஷமென்பதும், இருவரும் சுபக்கிரகங்களென்று எண்ணக்கூடாதென்பதும், இவ்விருவரும் மூன்றிலிருந்தால் சகோதரத்துக்கும், ஐந்திலிருந்தால் சந்தானத்திற்கும், ஏழிலிருந்தால் களத்திரத்திற்கும் ஆகாதென்பதையறிக. எனவே, இவ்விருவர்களும் ஒருவனுடைய சாதகத்தில் எந்தப்பாவகங்களில் இருக்கின்றார்களோ அந்தப் பாவகசம்பந்தமான பலன்களுக்குக் கெடுதியுண்டாகுமென்பது திண்ணம். இவ்விருவரும் சுபக்கிரகங்களாயிருப்ப இங்ஙனந் தீங்குண்டாவதற்குக் காரணம்:-

முன்னொருகாலத்திலே சந்திரன் தேவகுருவாகிய வியாழனுடைய மனையாளாகிய தாரையைக் கூடிச் சேர்ந்ததுமல்லாமல், அத்தாரையைத் தன்னுடன் கூட்டிக்கொண்டு போக அதுகாரணமாகத் தேவர்கட்கும் சந்திரனுக்கும் யுத்தமுண்டாயிற்றாகலின் இருவருக்கும் நீங்காத உட்பகையிருத்தற்காரணமாக, இவ்விருவரும் ஒரு இராசியில் சேர்ந்திருத்தலினால் பெருங்கேடு உண்டென்பதை ஆன்றோர் அறிந்து கொள்வார்கள்.

காலாமிருதத்தில் மாத்திரம் இவ்வித குருசந்திரயோகம் பூர்த்தி விஷயத்தை நீருமாத்திரஞ் சொல்லியிருக்கிறது. அதுவுங் கற்கடகராசியில் மாத்திரம் வியாழனும் சந்திரனும் இருந்தால் தோஷமில்லையாம். ஏனெனில் வியாழன் உச்சமாயும் சந்திரன் ஆட்சியாயிருத்தலினாலுமென்க.

"ஸதாவிரீயோத்குடமத்ரம்"

என்னும் வசனத்தினுல் வியாழனும் சந்திரனும் கற்கடகராசியில் இருக்கச் செனனமான புருஷன் சுபகருமங்களிற் சிறந்தவனும் பரோபகாரியும், ஏகசித்தமுடையவனுமாக இருப்பான் என்பதாம்.

கர்கடஸ்தௌ சந்திர குருஜாத: கர்கடகோ: அமிதாயுர் பவேதத ஸ்யசாம்பத்ராமிதமுச்யதே.

என்னும் பிரமாணப்படி உதய லக்னம் கற்கடமாகி அதில் குருவும் சந்திரனும் இருக்கப் பிறந்தவர்கள் அமிதாயுளையுடையவர்களாயிருப்பார்கள்.

பத்தாமிடம் கற்கடக லக்கினமாக அதில் குருவும் சந்திரனும் இருக்கப்பிறந்தவன, வித்தை, செல்வம், அபிமானம், கீர்த்தி, சாந்த குணம், பலரும் வணங்கத்தக்கவனும் ஆவான்.

ஏழாமிடம் உதயலக்கினம் கர்க்கடக லக்கினமாக அதில் குருவும் சந்திரனுமிருந்தால் அறிவுடையவனும், அரசனும், சாஸ்திரங்களை அறிந்தவனும் வியாபாரசித்தியுமுடையவனுமாவன்.

நிகழும் சித்திரபானு வருஷம் புரட்டாதிமாதம் (13-ம்) திகதி வியாழன் உச்சவீடாகிய கற்கடகத்தில் வருவார். எல்லோரும் கவனிப்பார்களாக இவர் பன்னிரு வருஷத்துக்கோர்முறைதான் இவ்விராசியில் வருவாரென்பதையுமறிக.

சிலசோதிடர்கள் குருவும் சந்திரனும் ஏகராசியிலிருந்தால் மிகவுசிதமென்பர் அது பொதுவிதி. இருவரும் கர்க்கடகத்திலிருப்பதே மிகவுசிதமாம்.

தினைத்துணை
நன்றிசெயினும்
பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரிவார்

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

134,36700

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமயம் சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் 9௦ விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும், தொலைவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறாப்பர்.

Y164 A. 21-11-41—20-11-42 (தி)

தி மலாயன் டிரேடிங் கொம்பனி

(சிங்கப்பூர்க் கொம்பனி)

இரும்பு, பித்தளைச்சாமான்கள், சீமேந்துவகைகள்
விற்பனவு செய்வோர் பெரியகடை, யாழ்ப்பாணம்

"புரொப்ரைட்டர்"
K. A. இரத்தினசிங்கம்

Y 19. 4-3-42—3-3-43

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabhai Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna, on Monday 31st August, 1942